சிவபுண்ணியத் தெளிவு

(பொழிப்புரையுடன்)

திருவிடைமருதூர்

ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம்

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —



ஸ்ரீ மகாலிங்கப்பெருமான்

உ
சிவமயம்

முகவுரை

மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள்வே டங்களே.

—திருஞானசம்பந்தர்.

உலகத்திற்குக் கருத்தாவாக இருக்கக்கூடியவர் சிவபெருமான். அவரே நித்தியர். அதாவது என்றும் உள்ளவர். பாசத் தொடக்கற்ற பரம்பொருள். அப் பரம்பொருளே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்கின்றது. இந்த ஐந்து தொழில்களையும் இறைவன் தம்பொருட்டுச் செய்கின்றாரில்லை. ஆன்மாக்களாகிய நம்பொருட்டே செய்கின்றாராவர். அச்செயல்களையும் அவர் என்றும் தன்னைவிட்டுப் பிரியாத சிவசத்தியோடு கூடியே செய்கின்றார்.

சிவபெருமானுக்கு உரிய வடிவம் மூன்று. அவை யாவன அருவம் அருவுருவம் உருவம் என்பனவாம். அருவத்திருமேனியைச் சிவம் என்கின்றோம். அருவுருவத் திருமேனியைச் சதாசிவம் என்கின்றோம். உருவத் திருமேனியை மகேசுரன் என்கின்றோம். இறைவனது திருவுருவம் நமது உருவத்தைப் போன்றது அன்று.

சிவாகமங்களில் இருபத்தையாயிரம் பாடல்களை அறிந்தவன் கனிட்டன். ஐம்பதினாயிரம் பாடல்களைப் பயின்றவன் மத்திமன். ஒருலக்கம் பாடல் தெரிந்தவன் உத்தமன். ஏகனாகிய இறைவனின் செயலை இவ்வாறு அறிந்துகொள்ளவேண்டுமென்று இருபத்தெட்டு ஆகமங்களுங்கூறுகின்றன. ஆகமங்களிலுள்ள ஒவ்வொரு இயலையும் முறையாகப் படித்துணர்ந்தவனே பண்டிதனாவான். ஆகவே ஆகமங்களை ஐயமறக்கற்றோமானால் நமது பாவங்கள் நீங்கிப் புண்ணியங்கள் பெருகும் என்பதை இந்நூல் நமக்கு ஐயமறத் தெரிவிக்கின்றது (பாடல் 143). இவைகளின் விரிவுகளைச் சிவாகமங்களில் காணலாம்.

இந்நூலைச்செய்த ஆசிரியர் இன்னாரென்று அறிய இயலவில்லை. ஆயினும் இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பதை நூலுள்வரும் குறிப்புக்கொண்டு உணரலாகும். ஆசிரியர் விசுவ சாதாக்கியம் என்னும் ஆகமத்தில் கூறப்பட்ட சிவபுண்ணியங்களைச் சிவ புண்ணியத்தெளிவு என்னும் பெயரால் நூலாக ஆக்கியுள்ளதாகக் கூறியுள்ளார் (பாடல் 27). இந்த நூலிலுள்ள ஒவ்வொரு செயலும் சைவசமயிகட்கு மிகமிக இன்றியமையாத ஒன்று. திருக்கோயில், திருமடம், ஆசாரியன் இவர்கள் சிறப்பு, இவர்கள் இருக்குமிடங்களின் சிறப்பு, ஆலயங்களில் நடக்கும் சிறப்புக்கள் யாவும் இந்நூலுள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

கோயில் என்றால் என்ன? அங்கு நடக்கும் கொடியேற்றம், திருவிழா இவைகளின் தத்துவம் என்ன? என்பனபோன்ற பொருள்களை நூலாசிரியர் மிகமிகத் தெளிவாகக்கூறி விளக்கியுள்ளார்.

இதுபோன்ற நல்ல நூல்களைப் பதிப்பித்து வெளியிடவேண்டும் என்பது, திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்தொன்றாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரியசுவாமிகள் அவர்கள் பெருங்கருணையாகும்.

இந்நூல் 1885-ல் காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் அவர்களால் பரிசோதிக்கப்பட்டு, சென்னை புட்பரதச் செட்டியாரால் கலாரத்நாகர அச்சகத்தில் அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளது. பின்னர் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆணைவண்ணம் ஆதீன வித்துவான் திரு. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களால் 1954-ம் ஆண்டு எல்லோரும் படிக்கத்தக்க வகையில் திருந்திய பதிப்பாக வெளியிடப்பெற்றுள்ளது. இந்நூலின் அருமையைத் திருவுளங்கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருளாணை வண்ணம் மறுமுறையும் ஆதீனத்திற்குச் சொந்தமான திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தான வெளியீடாக, பராபவ ஆண்டுத் தொடக்கநாளன்று வெளிவருகிறது. ஒவ்வொரு பாடலுக்கும் விளக்கமான பொழிப்புரை எழுதியுள்ளேன். குற்றமிருப்பின் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

திருவிடைமருதூர், 5—4—66.

பொன். சுப்பிரமணியபிள்ளை,
தலைமைத்தமிழாசிரியர்,
திருவாவடுதுறை ஆதீன உயர்நிலைப்பள்ளி.

உ

பிறையார் சடையண்ணல்
மறையார் மருதரை
நிறையால் நினைபவர்
குறையார் இன்பமே.

—திருஞானசம்பந்தர்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

சிவபுண்ணியத்தெளிவு

காப்பு

பழகிய பதித்துவப் பான்மை எய்தவும்
முழுகிய பசுத்துவ முற்று நீங்கவும்
ஒழுகிய மும்மதத் தொளிகொள் ஞானமார்
அழகிய பிள்ளையார் அடிகள் போற்றுவாம்.

பொழிப்புரை: ஆன்மாக்கள் இயல்பாகப் பழகி மேற்கொண்டொழுகி, பதித்தன்மை அடைந்து சிறப்பு எய்தவும், பாசத்தொடக்கு முழுவதும் நீக்கம்பெறவும் மூன்றுமதங்களும் ஒளிபெற்று விளங்குகின்ற ஞான வடிவமாகிய அழகிய மூத்த பிள்ளையாரது திருவடிகளை வணங்குவாம்.

சபாநாதர் துதி

உலகினும் உயிரினும் ஒன்றி நின்றருள்
குலவிய ஒளிர்புயிர் குறிக்க ஐந்தொழில்
இலகிய மன்றினுள் எழில்நடஞ் செய்வோன்
வலமிகு மலரடி வழுத்து வாமரோ.

பொ-ரை: தில்லைத் திருமன்றுள் நடனமாடுகிற நடராஜப்பெருமான் உலகோடும், உயிர்களோடும் ஒன்றிநின்று அருள்செய்பவன்; உயிர்கள் விளக்கம் பெற ஐந்தொழிலைச் செய்து அருள் வழங்குபவன்; அவனது திருவடியை வணங்குவாம். 1

சிவகாமியம்மை துதி

ஒற்கமில் இருண்மலத் தொளியின் நீங்கியே
நற்கதி பெறவருள் நயந்து போற்றுவாம்
சிற்கனன் தன்னெடு சிறப்பின் ஓங்கியே
கற்கொளி போன்றுளாள் கமல பாதமே.

பொ - ரை : ஒழிவில்லாத ஆணவ மலங்களின் தன்மைகளைப் போக்கி ஆன்மாக்களுக்கு நல்லருளை வழங்கும் நடராஜப்பெருமானேடு இணை ந்து நல்லருள் வழங்கும் அம்மையினுடைய திருவடிகளை விரும்பி வணங்குவாம். 2

விநாயகர் துதி

விடமணி களனென விளங்கித் தோன்றுவே
தடமலர் நீர்கொடு தாழ்ந்து போற்றுவாம்
வடவரைப் பாரதம் மருப்பிற் றீட்டுமா
கடகரி முகத்தவன் கமல பாதமே.

பொ - ரை : இமயமலையில் பாரதக்கதையைத் தன்னுடைய ஒருகோட்டால் எழுதிய யானைமுகத்தவனின் திருவடித் தாமரைமலர்களை நீரும் மலருங்கொண்டு தாழ்ந்து வணங்குவாம். 3

சுப்பிரமணியர் துதி

அந்தமா தியுமிலா ஆண வத்தொடும்
பந்தமா னவைகெடப் பணிந்து போற்றுவாம்
சந்தமார் தடவரைத் தமிழ்க்க டற்கருள்
கந்தவேள் பூங்கழற் கமல பாதமே.

பொ - ரை : சந்தனமரங்கள் நிறைந்த பொதிய மலையில் அகத்திய முனிவருக்குத் தமிழை அருளிய

முருகப்பெருமானுடைய தாமரைமலர் போன்ற திருவடிகளை, முடிவும் முதலும் இல்லாத ஆணவம் கன்மம் முதலிய பந்தங்கள் நம்மைவிட்டு நீங்கப் பணிந்து துதித்தல் செய்வாம். 4

நந்திதேவர் துதி

ஓதுமுப் பொருளையும் உணர்த்து நாற்பதத்(து)
ஆதியா கமந்தழீஇ அதனைப் பன்னிரு
போதநூல் திரமதாப் புகன்ற நந்திதன்
பாதபங் கயமலர் பணிந்து போற்றுவாம்.

பொ - ரை: அறிவுடையோர் எடுத்துரைக்கின்ற பதி, பசு, பாசம் என்னும் மூன்று பொருள்களையும் உணர்ந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் விளக்கும் முதல் ஆகமத்தைத் தழுவி, அவ்வாகமத்தைப் பன்னிரண்டு சூத்திரங்கள் கொண்ட சிவஞானபோதம் என்னும் நூலாக ஆக்கி அருள்செய்த நந்தியெம்பெருமானின் இரு திருவடி மலர்களை வணங்கித் துதிப்பாம். 5

அகத்தியமுனிவர் துதி

சகத்துயி ருண்மலத் தனுவின் நீங்கியே
அகத்தினு ளவையெலாம் அடக்கு வாய்மையா
மகத்துவம் எமக்கருள் மலயத் தோங்குசீர்
அகத்தியன் திருவடிக் கன்பு செய்குவாம்.

பொ - ரை: உலக உயிர்களின் உள் மலங்களை ஒழித்து, அவைகளையெல்லாம் மனத்தினுள் அடக்கி, உண்மையாகிய சிறப்பை எங்களுக்கருளிய பொதிய மலையிலிருக்கும் சிறப்புடைய அகத்தியனின் திருவடித் தாமரை மலர்களை வணங்குவாம். 6

காரைக்காலம்மையார் துதி

கொம்மைசேர் வரிமுலைக் கூற னூர்தமைச்
செம்மைசேர் கயிலையிற் சென்று போற்றியே
இம்மையே சிவகதி எய்து காரைக்கால்
அம்மைதாள் மலர்முடிக் கணிகு வாமரோ.

பொ - ரை : சிறந்த அழகிய கொங்கையையுடைய உமையை ஒருபாகத்தேயுடைய இறைவரைச் செம்மையாகிய கயிலையில்சென்று வணங்கி இப்பிறவியிலேயே சிவகதியெய்திய காரைக்காலம்மையாரின் திருவடி மலர்களை நமது முடியில் அணிந்துகொள்ளுவாம். 7

திருஞானசம்பந்தசுவாமிகள் துதி

பிறையணி மௌலியன் பேதை யாளொடும்
சிறையணி புனற்றடத் தீரம் மேவியே
நிறையமு தருத்தவுள் நெகிழப் பாடுநான்
மறையவன் மலர்ப்பதம் வணங்கி வாழ்த்துவாம்.

பொ - ரை : பிறைச்சந்திரனை அணிந்த சடைமுடியையுடைய இறைவன் உமையாளோடும் குளக்கரையை அடைந்து ஞானமாகிய திருவமுதத்தையூட்ட மனம்நெகிழ்ந்து பாடும் நான்மறைவல்ல திருஞானசம்பந்தப்பெருமானின் நல்லடிகளை வணங்குவாம். 8

திருநாவுக்கரசுசுவாமிகள் துதி

திரைபொரு கடலிடைச் செறித்துத் தியமன்
புரையினர் விடுசிலை புணைய தாகவே
உரைதரும் ஐந்தெழுத் துணர்த்து பாடலால்
கரைவரும் அப்பர்தாள் கருது வாமரோ.

பொ - ரை : அலைகளோடுகூடிய கடலிலேதள்ளித் தீமைமிக்க அமணர் தீங்குசெய்ய அவர்கள் கட்டிய கல்லே தெப்பமாகக்கொண்டு அறிஞர் உணர்ந்து கூறும் திருவைந்தெழுத்தை வைத்துத் திருப்பாட்டியற்றிக் கடலிலிருந்து கரையேறிய திருநாவுக்கரசரது திருவடிகளை வணங்குவாம். 9

சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி

அந்தரம் இழிந்தவெள் ளானை மீதுறீஇ
மந்திர வெள்ளிமா மலையின் ஏகியே
சந்திர சேகரன் சரணம் சேர்தமிழ்ச்
சுந்தரன் அடிமுடி சூட்டு வாமரோ.

பொ - ரை : விண்ணிலிருந்து கீழிழிந்து வந்த வெள்ளானையின்மீது அமர்ந்து மேருமந்தரமாகிய வெள்ளிமலையை அடைந்து சந்திரசேகரனாகிய இறைவனின் திருவடிகளை அடைந்த தமிழில்வல்ல சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளை முடியில் சூட்டிக் கொள்ளுவாம். 10

மாணிக்கவாசகசுவாமிகள் துதி

பேதவூர் தனுகர ணாதி பின்னிட
நாதவூ ரகன்றுமெய்ஞ் ஞானநாட் டத்தால்
போதவூர் புகுந்துதம் போக மேற்கொளும்
வாதவூ ரடிகளை வணக்கம் செய்குவாம்.

பொ - ரை : தநுகரணங்களையெல்லாம் வென்று உண்மைஞானத்தை அடைந்து சிவபோகத்தழுந்தும் திருவாதவூரடிகள் திருவடிகளை வணங்குவாம். 11

திருத்தொண்டர் துதி

நீக்கியா ரிருண்மலம் நிறைந்த பேரொளி
ஆக்கியே மனேலயத் தகன்ற நோக்கினல்
நோக்கியே பேருயர் நோன்மை பெற்றசிர்ப்
பாக்கியத் தொண்டர்தாள் பணிகு வாமரோ.

பொ - ரை : இருண்மலங்களை நீக்கிய இறைவ னின் இணையடிகளை வணங்கித் தவத்தினல் அருள் பெற்ற பாக்கியர்களாகிய திருத்தொண்டர்களின் திரு வடிகளை வணங்குவாம். 12

மெய்கண்டதேவநாயனர் துதி

நற்றமி ழாற்சிவ ஞான போதநூல்
சொற்றுயிர்க் கியல்பதாம் சுகோத யம்தரக்
கற்றவன் வெண்ணெய்மெய் கண்ட தேசிகன்
கொற்றமார் குரைகழல் குழைந்து போற்றுவாம்.

பொ - ரை : நல்ல தமிழால் சிவஞானபோதத்தை அருளி உயிர்க்கு மேன்மைதருமாறு செய்த திருவெண் ணெய்நல்லூர் மெய்கண்டதேசிகனின் வெற்றி மிக்க கழல்களை வணங்குவாம். 13

அருணந்திதேவநாயனர் துதி

புன்னெறி அகற்றிய போத சூத்திரத்
தின்னெறி விளங்கநூல் இலங்கச் செய்துமேல்
நன்னெறி காட்டரு ணந்தி தேசிகன்
தன்னிரு பங்கய சரணம் போற்றுவாம்.

பொ - ரை : ஆன்மாக்களின் அற்பநெறியை அகற் றிய சிவஞானபோத சூத்திரத்தின் நல்ல நெறிகள் விளங்கச் சிவஞானசித்தியார் என்ற நூலாக்கி மேலான

நெறிகளைக் காட்டியருளிய அருணந்திதேசிகருடைய தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்குவாம். 14

உமாபதிதேவநாயனுர் துதி

சொற்றரு முதல்வழித் தொன்மை நான்மறை
கற்றெளிர் சிவப்பிர காச நூல்புகல்
கொற்றவன் குடிவரு குரவன் எம்மையாள்
நற்றவன் பதமகம் நாட்டு வாமரோ.

பொ - ரை : சொல்லுதற்கரிய முதல்நூல் வழிநூல் இவைகளின் தன்மைகளை முறையாக அறிந்து உலகுக்கொளியாகச் சிவப்பிரகாசம் என்னும் நூலையருளிய கொற்றவன்குடியிலிருந்த அருட்குரவனுகிய உமாபதி சிவத்தின் திருவடிகளை மனத்துளிருத்துவாம். 15

குகைமறைஞானதேசிகர் துதி

மாசிலா கமமெலாம் வரம்பு கண்டுயிர்ப்
பாசிவே ரறத்தமிழ்ப் பனுவல் செய்தவன்
தேசமார் குகைமறை ஞான தேசிகன்
வாசமா மலர்ப்பதம் வணங்கு வாமரோ.

பொ - ரை : குற்றமில்லாத ஆகமங்களின் வரம்பு கண்டு உயிர்களின் மலத்தை அழிக்கத் தமிழ்ப்பனுவல் செய்த உலகம்புகழும் குகை மறைஞானதேசிகனின் மலர்போன்ற திருவடிகளை வணங்குவாம். 16

சத்தியஞானதேசிகர் துதி

சித்திசேர் வெண்ணெய்மெய் கண்ட தேசிகன்
பத்திசேர் மரபினைப் பரித்த பண்டிதன்
முத்திசேர் சிவபுர முதல்வன் எம்மையாள்
சத்திய ஞானிதன் சரணம் போற்றுவாம்.

பொ - ரை : எல்லாச் சித்திகளும் பெற்று விளங்கிய திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேசிகனின் உண்மையான மரபைப் பின்பற்றிய ஞானபண்டிதனாகிய முத்திநகருள் ஒன்றாகிய சிவபுரத்தில் தோன்றிய முதற்குரவனாகி எம்மையாண்ட சத்தியஞானியின் சரணங்களைப் போற்றுவாம். 17

அவையடக்கம்

புன்சொலா நரகினைப் புகுத்திக் கேட்பவர்க்(கு)
இன்சொலா யினுமஃ திழுக்கற் பாலதாம்
நன்சொலாம் சிவகதி நல்கு மேயெனில்
புன்சொலா யினுமிகப் போற்றும் தன்மைத்தால்.

பொ - ரை : இகழக்கூடிய புன்சொல்லாகிய நரகிடைப்புகுத்திக் கேட்பவர்க்கு இனிமையாயிருப்பினும் அது விடற்பாலதாகும், நல்ல சொல்லாகிச் சிவகதி கொடுக்குமென்னில் அது அற்பமாகிய சொல்லாயினும் உலகவரால் போற்றக்கூடிய தன்மையுடையதாம். 18

கண்ணுதல் புகழினைக் கருதி டாவெனில்
பண்ணவர் மொழிகளும் பழியின் பாலவாம்
அண்ணல்தன் புகழ்புகல் அடிய னேன்மொழி
தண்ணரிய வாயினும் புகழிற் சாருமால்.

பொ - ரை : நெற்றிக்கண்ணராகிய இறைவனின் புகழினைக் கருதாத சொல்லெனில் தேவர்கள் மொழியாயினும் அது பழியினையுடையதாம். இறைவனின் புகழினைச் சொல்லும் அடியேனுடைய சொற்கள் அற்பமுடையதாயினும் புகழினைச் சாரக்கூடியதாம். 19

நூற்சிறப்பு

அழுக்கிலா அநாதி முத்தன்
அகண்டித துரியா தீதன்
இழுக்கில்லே தாக மங்கள்
இயம்பினன் பொதுச்சி றப்பென்(று)
ஒழுக்கமா ருலகத் தோர்க்கும்
ஓங்குசத் திநிபா தத்தின்
வழுக்கிலா தவர்க்கு மென்றே
மதித்தனர் நூல்வல் லோரே.

பொ - ரை: மலமற்றவன், அநாதியேயுள்ளவன், முத்தன், கடந்தவன், மேல்நிலையில் உள்ளவனுகிய இறைவன் இழுக்கில்லாத வேதாகமங்களைப் பொது சிறப்பு என்று இருவகையாக அருளியவன் அவ்விரண்டும் நல்லொழுக்க நெறியில் நின்ற உலகத்தவர்க்கும், மிக உயர்ந்த சத்திநிபாதமடைந்த தவத்தினர்க்கும் ஆகும் என்றே நூல்வல்ல அறிஞர்கள் மதிப்பிட்டுக் கூறினர்கள். 20

சிவனைச் சிவத்தி னென்றுச்
சேர்க்குஞ்சித் தாந்தத் தோர்க்கும்
சிவனைப் பரத்தி னென்றுச்
சேர்க்கும்வே தாந்தத் தோர்க்கும்
பாவனை இரண்டும் ஒன்றே
பரமஞா னத்தோர்க் கெல்லாம்
மேவிய கரும காண்டம்
விளம்பிடிற் பேத மாமே.

பொ - ரை: சித்தாந்த நெறியென்பது ஆன்மாக்களைச் சிவத்திடத்து ஒன்றுகச் சேர்ப்பது. வேதாந்த

நெறியாவது ஆன்மாக்களைப் பரத்திடை ஒன்ருகச் சேர்ப்பது. பரமஞானிகளாகிய தவத்தோர்க்கெல்லாம் இரண்டு நெறிகளின் தன்மைகளும் ஒன்றே ஆகும். ஆயினும் உள்புகுந்து ஆராய்ந்து பார்த்தால் கரும காண்டம் என்பது இரண்டு நெறியினர்க்கும் வேறு வேருனதேயாகும். 21

சுருதியின் மிருதி முற்றும்
சொற்றிடும் புரான மெல்லாம்
கருதுபுன் ணியங்கள் தத்தம்
கதிபசுத் துவமே காட்டும்
பொருதிமி ரகற்றிச் சைவம்
புகல்சிவ புண்ணி யந்தான்
வருதியென் றருளாற் சாலோ
காதியை வழங்கு மன்றே.

பொ - ரை : வேதம், மிருதி, புராணம் ஆகிய மூன்றும் எண்ணுகின்ற புண்ணியங்கள் யாவும் தங்கள் தங்களுடைய தன்மைகளையே விளக்கிக்காட்டும். ஆன் மாக்களின் ஆணவத்தை அகற்றச் சைவ ஆகமங்கள் கூறும் சிவபுண்ணியம், என்றும் இறைவனருளால் சாலோகாதி புண்ணியங்களை ஆன்மாக்கட்கு வழங்கி யருளும். 22

ஆரணம் புகன்ற வாற்ருல் அக்கிநிட் டோம மாதி
ரேணி விரத நாற்சாந் திராயணம் செய்கின் ருேர்கள்
பூரண விமானத் தேறிப் பூமியந் தாசு வர்க்கத்
தேரணி புனித ராகி இன்பொடும் போகம் துய்ப்பார்.

பொ - ரை : வேதங்கள் சொல்லுகின்ற முறையால் அக்கிநிட்டோமம் முதலிய சிறந்த விரதங்கள் இருந்து

சாந்திராயணம்முதலிய விரதம் இருந்தவர்கள் இந்திர விமானமேறிப் பூமி சுவர்க்கம் முதலிய இடங்களில் புனிதத்தன்மை உடையவராகி இன்புற்றுப் போகந் துய்ப்பார்கள். 23

ஓசைகொள் அசுவ மேதம்
ஒருநூறி யாகம் செய்தோர்
வாசவன் பதத்திற் சேர்வார்
மற்றிவர் அநந்த கோடி
நேசமார் மகத்தி னாலும்
நிறைசிவன் தொண்டர் தாமே
பேசுசாட் டியத்தாற் சேரும்
பெரும்பதம் அடையார் மன்னே.

பொ - ரை : சிறப்புமிக்க அசுவமேதவேள்வி நூறு செய்தோர் இந்திரபதம் அடைந்து இன்புறுவார்கள். ஆயினும் இவர்கள் பலகோடி வேள்விகளைச் செய்து இன்புற்று வாழ்ந்தாலும், சிவனடியார்கள் அடையும் பெரும்பதத்தையடைந்து வாழமுடியாது. 24

களித்திடு மிவைச ரீர கன்மமென் றமைந்த வாற்றல்
விளித்துயி ரீனப்பி றப்பில் விழ்த்திடும் அதனால் ஆவி
குளித்திடும் மலத்தை நீக்கிக் குரைகழல் காட்டும் ஈசன்
தெளித்திடு சிவாக மத்திற் செப்புபுண் ணியங்கள் தாமே.

பொ - ரை : சிவாகமங்களில் சொல்லப்படுகின்ற புண்ணியங்கள் மகிழ்ச்சியைக் கொடுக்கும் செயல்கள் சரீரகன்மமென்று எண்ணி மக்களுயிர்களைப் பிறப்பில் ஆழ்த்திவிடும். அதனால் உயிரைக் கொள்ளைகொள் ளும் இயல்பாய மலங்களை நீக்கி இறைவன் தன்னு டைய திருவடிகளைக் காட்டியருளுவான் என்று தெளி வாகக்கூறும். 25

ஆதியில் அநாதி சச்சி
தாநந்த அமலன் தானே
ஓதிய விமல ஞானம்
உணர்வுயிர்க் குறுமை நோக்கிச்
சோதிசேர் கருணை மேனி
தொடக்கிப்பின் அருளாற் கூறும்
நீதிசேர் காமி காதி
நிறைமொழி இருபத் தெட்டாம்.

பொ - ரை : ஆதிகாலத்தில் அநாதிமுத்தனாகிய இறைவன் தானே ஆன்மாக்கள்பொருட்டு இரங்கி ஆன்மாக்களுக்கு ஞான உணர்வு வராமைநோக்கி ஒளிமிக்க தன் திருமேனியை ஆன்மாக்கள் உணர்ந்து அனுபவிக்கும்பொருட்டு அவ்விறைவனாலே அருளிச் செய்யப்பட்டன இருபத்தெட்டு ஆகமங்களாம். 26

இங்கிவற் றின்பே தங்கள்
இருநூற்றே ழாம வற்றுள்
துங்கமார் நந்திக் கெந்தை
சொற்றவா கமங்கள் தம்மில்
தங்கு சிந்திய விசுவ
சாதாக்கியம் தன்னின் மன்னும்
பொங்குபுண் ணியத்தை யானும்
தமிழினாற் புகல லுற்றேன்.

பொ - ரை : இவ்வுலகில் இருபத்தெட்டு ஆகமங்களின் பேதங்களாகிய உபாகமங்கள் இருநூற்றேழாம். அவற்றுள் பரிசுத்தமாகிய திருநந்திதேவருக்கு இறைவர் உபதேசஞ்செய்த ஆகமங்களுள் ஒன்றாகிய விசுவ சாதாக்கியம் என்னும் ஆகமத்தில் கூறப்பட்ட சிவ புண்ணியத்தெளிவினைத் தமிழினாற்கூறியுள்ளேன். 27

நூற்பெயர்

உலகினுக் கிதம தாயும் உயிர்க்குறும் சித்தி யாயும்
பலமுறக் கொடுப்ப தாயும் பகருமுத் தமம தாயும்
குலவுபுண் ணியத்தை ஈசன் கூறிட நந்தி கேட்டே
புலமுற இதற்கு நாமம் புண்ணியத் தெளிவென் றுநூல்.

பொ - ரை : உலகிற்கு நன்மை அளிப்பதாயும், ஆன்மாக்களுக்குச் சித்திகளை அருளுவதாயும், ஆன்மாக்களுக்கு வேண்டும் நன்மைகளை உறுதியுடன் கொடுப்பதாயும், யாவரும் பாராட்டும் உத்தமமானதாயும், விளக்கத்தோடு கூடிய சிவபுண்ணியத்தை இறைவன் சொல்லத் திருநந்திதேவர் கேட்டு அறிவுக்குப் பொருந்த இந்நூலுக்குச் சிவபுண்ணியத்தெளிவு என்று பெயர் சூட்டினர் என்றவாறு. 28

நூல்

கோபுரசிகரம் தரிசிக்கும் பலன்

பிறையணி சிகரம் தூரப்
பிறங்கிடத் தரிசித் தேபின்
அறைகழற் கமல பாதத்
தடிகளா லயத்து ளேகி
முறையுறப் பணிந்தார் முன்னம்
முற்றிய உடலந் தோறும்
சிறையுறப் புரிந்த பாவம்
தீர்தலக் கணத்தில் திண்ணம்.

பொ - ரை : இளம்பிறைச் சந்திரனைத் தலையிலே சூடிக்கொண்டு விளங்குவர் இறைவர். அவ்விறைவர் உறையும் திருக்கோயில்களில் உயர்ந்த கோபுரங்கள்

காணப்படும். தூரத்தில் வருகின்றபோதே கோபுரம் நமக்குக் காட்சி கொடுக்கும். கண்டவுடன் கீழ்விழுந்து நிலத்தில் படிந்து வழிபடவேண்டும். வழிபட்டபின், மனநிறைவுடன் ஒலிக்கின்ற சிலம்புகள் அணிந்துள்ள திருவடிகளையுடைய இறைவர் உறையும் ஆலயத்துள் புகவேண்டும். உள்ளே சென்றவுடன் முறையாக அட்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களால் ஆண்டவனை வழிபடவேண்டும். அவ்வாறு முறையாக வணங்கினே மானல் நாம் முற்பிறவியில் அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்கள் அனைத்தும், சிறையிலடைபட்டவன் விடுதலை கிடைத்தால் எப்படி வெளியே செல்வானே அவ்வாறு நம் உடலைவிட்டு அக்கணத்திலேயே ஓடி விடும். இது உறுதி.

கோபுரதரிசனம் உயர்ந்தது என்பதை “உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம், வள்ளற் பிரானுர்க்கு வாய் கோபுரவாசல்” என்ற திருமந்திரத்தால் அறியலாகும். கோபுரம் தூல இலிங்கம் என்ற ஒரு கொள்கையும் உண்டு. 29

வழிநடந்துவந்த இளைப்போடும் வலம்வரும் பலன்

வழியினில் அதிதூ ரத்தில்
வந்திடும் இளைப்பி னேடும்
விழிநுதல் அமலன் கோயில்
மேவியே வலஞ்செய் வோர்தாம்
மொழியதர்க் கிலேசத் தோடும்
முயன்றமுற் பாவ மெல்லாம்
அழிவுறப் புரிவன் எங்கோன்
அருந்தவம் இதன்மே லுண்டோ.

பொ - ரை : மக்கள் இறைவன் இருக்குமிடத்தை, பண்டு வழிநடந்துவந்தே அடைந்து வழிபட்டார்கள்.

வழிநடந்து வந்தால் எத்தகையோருக்கும் இளைப்பும் களைப்பும் ஏற்படும். அதிக தூரம் நடந்துவந்தோர் சொல்லொணாத இளைப்பும் களைப்பும் அடைவர். அவ்வாறு ஏற்பட்டாலும் அவர்கள் நெற்றிக்கண்ணை யுடைய இறைவர் திருக்கோயிலை அடைந்தவுடன் முன் வலம்வரவேண்டும். அவ்வாறு வலம்வந்தால் உடன் நம்மைப் பற்றிய மனத்துயர் நீங்கும். பின்னர், பல பிறவிகளில் ஏற்பட்ட பாவங்கள் அனைத்தும் அழிந்து போம். இவை யாவும் இறைவர் அருளால் நடப்பவை. ஆகவே, ஆன்மாக்களாகிய நமக்கு இறைவனுடைய திருவாலயத்தை வலம்வருவதைக் காட்டிலும் மேலான தவம் யாதொன்றுமில்லை. ஆகவே, நாம் ஆலயத்தை அடைந்தவுடன் முதலாவதாக மேற்கொள்ளவேண்டியது வலம் வருதலேயாம். 30

ஆசாரியர் இருக்கும் மடாலயத்தையும்
அவர் திருமேனியையும் வலம்வரும் பலன்

இன்னவை குரவன் ஓங்கும்
எழில்கொளா லயத்திற் செய்தோர்
சொன்னமுற் பலத்தி ரட்டி
துன்னுவர் சோதி ஞானம்
மன்னிய குரவன் மேனி
மகிழ்வுறத் தொழுது நின்றோர்
பின்னும்வே ணியனைக் கண்ட
பேற்றிரு குணிதம் சேர்வார்.

பொ - ரை : இறைவனும் அவனருள்பெற்ற ஆசாரியரும் ஒன்று என்பது சிவாகமத்துணிபு. ஆசாரியர் வீற்றிருக்கும் இடம் மடாலயம் என்று பெயர்பெறும். மடாலயத்தைக் கண்டவுடன் முற்கூறியவாறு வழிபட வேண்டும். பின்னர் ஆசாரியர் திருமேனியைக்கண்டு

மகிழ்வுடன் வழிபடவேண்டும். அவ்வாறு வழிபடுவோமாஞல் இறைவரை வழிபடுவதிலும் இரண்டுமடங்கு நன்மை உண்டாகும். மேலும், குருவின் திருவருள் நோக்கால் இரட்டிப்பு ஞானம் கைகூடும். இவ்வாறு குரவருக்கு ஆட்பட்டோர் மேலும் சடைமுடியையுடைய இறைவரை நேரில் கண்டபேற்றைப் பெறுவர்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்" என்ற திருமந்திரம் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. ஆகவே மடாலயத்தையும் சிவனுறையுமிடம் என்றே எண்ணி முறைப்படி வலம்வரல்வேண்டும். காரணம் மடாலயத்திலுள்ள குரவர் "நடமாடுங்கோயில்" ஆதலான். இக்கோயிலை வழிபட்டால் வேறு எக்கோயிலையும் வழிபடவேண்டாம்.

31

ஆசாரியரைப் பணிந்து துதிக்கும் பலன்

பதியைப் பணியும் பலத்திரட்டி
பரம குரவற் பணிவோர்க்கு
வதியும் உயிர்க்குள் உயிராகி
வளரு ஞான வரோதயன்பால்
துதியிற் சதமாம் தேசிகனைத்
துதிப்போர் தமக்குத் தொகும்பலனென்
றதிக மறைகள் அறைதலினல்
அவன்றன் பெருமை அளப்பரிதே.

பொ - ரை : இவ்வாறு மடாலயத்தை முறைப்படி வலம்வந்தோர் உள்ளேசென்று குருவை நேரிற்கண்டு வழிபடல்வேண்டும். அவ்வாறு பணிந்தால் பதியாகிய இறைவரை வணங்கிப்பெற்ற அப்பலனைக் காட்டிலும் இரண்டுமடங்கு பலனுண்டாகும். குரவனுவான் உயிருக்குயிராக உள்நின்று ஞானங்களை ஆன்மாக்களுக்கு

உணர்த்துபவன். அதனல் அவன் ஞானவரோதய னுவான். அத்தகைய ஞானவரோதயனைத் துதித்தால் அடையும் பலன் அளவிடமுடியாத ஒன்று. இவைகள் யாவும் ஒருசேர அருட்குரவரால் கிடைக்கும் என்று வேதம் முதலாய நூல்கள் நமக்கு அறிவுறுத்துகின் றன. அதனல் அக்குரவரின் பெருமையை ஒருவராலும் அளவிட்டுரைக்க முடியாது.

இதனல், மக்களாகப் பிறந்த நாம் என்றும் அரு ளாசானை அவனிருக்குமிடத்தே சென்று வலம்வந்து முறையாக வழிபடவேண்டும் என்கின்ருர். 32

ஆசாரியருக்குப் பணிவிடைசெய்யும் பலன்

பாச மகற்றும் தேசிகற்குப்
    பரிவால் என்றும் பணியதனை
நேச முறவே புரிந்தோர்க்கு
    நிகழும் பரம சிவயோகம்
ஆசை பெருக்கும் போகவிதம்
    அடையக் கருதின் அவர்குரவன்
வாச மலர்ச்சே வடியிணைகள்
    மகிழ்ந்து பாங்கால் வணங்குகவே.

பொ - ரை : 'தேசிகனுவான் நம்மை இயல்பாகப் பற்றிய பாசங்களைப் போக்கி நமக்கு அருள்செய்பவன். அதனல் முன்னர் அன்புடன் ஆசாரியனை அடைய வேண்டும். பின், தக்க பணிவிடை செய்யவேண்டும். பணியினையும் அன்புடன் செய்யவேண்டும். அவ்வாறு செய்தோர்க்குப் பரமசிவயோகம் சித்திக்கும். யோகத் திடை ஆசையை ஊட்டும். எல்லாவித போகங்களையும் கொடுக்கும். இவைகள் யாவற்றையும் ஒருவன் அடைய

விரும்பினுல் அவன் மணம்மிக்க மலர்போன்ற ஆசாரியன் திருவடிகளை மகிழ்வுடன் அடைந்து முறையாக வணங்கவேண்டும்.

இதிலிருந்து ஆசாரியனுக்கு அன்புடன் பணிவிடை செய்தோர் எல்லா நலங்களும் பெறுவதுடன் சிவயோகம் சித்திக்கப்பெற்று மேலான இன்பத்தையும் அடைவர். ஆகவே, திருவடிச்சிறப்பும் பெருமையும் இதனுல் கூறப்பட்டுள்ளது. 33

திருவிழாவில் வலம் வருதலுக்கும்
ஆசாரியர்பின் வருதலுக்கும் பலன்

அட்ட மூர்த்தி அமலேசன்
அணியார் விழவில் வலம்வருவோர்க்
கிட்ட முறவோ ரடிக்கடிக்கங்
கியற்றும் பரிமே தப்பலனும்
சிட்டர் பரவும் தேசிகன்பின்
செல்கின் றோர்க்கும் பலமிஃதே
கட்ட மலமும் வினையுடலும்
கழித்துச் சிவத்திற் களிப்பாரே.

பொ - ரை : ஆண்டவன் அட்டமூர்த்தி என்னும் பண்புடையவன். தேவர்கள் அனைவரும் வழிபடுகின்ற சிறப்பினைப் பெற்றவன். அவ்விறைவனுக்கு ஆண்டு தோறும் திருவிழா நடைபெறும். திருவிழாக்காலத்தில் இறைவனைத் தவருது வழிபடவேண்டும். அக்காலத்தில் இறைவருடன் நாமும் வீதிவலம் வரல்வேண்டும். மனவிருப்பத்துடனே திருவிழாவில் திருவீதி வலம் வந்தால் ஒரு அடிக்கு ஒரு அடி அசுவமேதயாகம்செய்த பலன் ஆன்மாக்கட்குக் கிட்டும். இறைவர்பின்சென்று வலம்வருவதுபோல் ஞானிகள் வழிபடும் அருட்குரவர்

பின் செல்வோர் அடையும் பலனும் மேற்கூறியதே. இவ்வாறு முறையாக வழிபட்டு வலம்வருவோமானுல் முன்னர் நம்மைப் பிணித்துள்ள ஆணவமலக்கட்டு அகலும். அது அகன்றபின் வினைவயமாக ஏற்பட்ட உடல் கழியும். இரண்டும் கழிந்தநிலையில் ஆன்மாக்கள் நித்தியமாக அடைவது சிவத்தோடு இரண்டறக் கலத்தலேயாம். அவ்வாறு கலந்து களிப்படையும் என்றவாரும். 34

துவசாரோகணம் செய்யுங்காலத்தில்
அதன்பின் வலம்வரும் பலன்

பந்த மான பசுபாசப்
பகைவன் இடபக் கொடியேற்றும்
அந்த வேலே தனிற்சென்றே
அழகார் கொடிப்பின் வலம்வருவோர்
புந்தி களிகூர் தமனியமும்
பொன்னும் மகவும் பௌத்திரரும்
சிந்தை களிப்பக் காசினியிற்
செல்வம் பெருகத் திளேப்பாரே.

பொ - ரை: இறைவர் ஆன்மாக்களேப் பந்தித்துள்ள பாசங்களேப் போக்கி அருள்செய்பவர். பாசங்கட்கு அவர் பகைவர். அவ்விறைவர் இடபக்கொடியை அடையாளமாக உடையவர். அவருக்குச்செய்யும் திருவிழாவில் முதன்மையானதும், முதலாவதும் இடபக் கொடியேற்றும் திருவிழாவாகும். அவ்வாறு கொடியேற்றுங்கால் ஆலயஞ்செல்வோர் அழகிய இடபக் கொடியை வலம் வரவேண்டும். அவ்வாறு மனமகிழ்வுடன் வலம் வந்தோமானுல் பொன், பூமி, மகவு, பௌத்திரராகிய செல்வங்களே மனங்களிப்ப அடைந்து மகிழலாம். இவைமட்டுமன்றி இவ்வுலகில் மக்களின்

வாழ்க்கைக்கு வேண்டிய செல்வங்கள் அனைத்தையும் பெற்று வாழலாம்.

இடபம் இலச்சினை, கொடி, ஊர்ந்துசெல்லும் வாகனம் ஆகிய பேற்றினைப் பெற்றது. அதனுடைய அருள்நோக்கே ஆன்மாக்கட்கு அனைத்து நலனையும் அருளும் என்கின்றார். 35

துவசாரோகண நிவேதனத்தின் பலன்

வடமே ருவினைச் சிலைவளைத்த
வரதன் இடபக் கொடியேற்றில்
படமார் இடப நிவேதனத்தைப்
பரிவால் அருந்தும் பைந்தொடிதான்
திடமே மலடி என்றிடினும்
சிறந்த மகவைப் பெற்றிடுவள்
விடமார் கண்டத் தமலேசன்
விளம்பு நூலின் விதியிதுவே.

பொ - ரை : இறைவர் மேருமலையை வில்லாக வளைத்தவர். வரதன் என்னும் பெயரினையுடையவர். அவருடைய விழாவில்தான் இடபக்கொடி ஏற்றுவது வழக்கம். கொடியேற்றுங்கால் இறைவர்க்கு நிவேதனம் செய்யப்படும். அந்த நிவேதனப்பொருளை அன்புடன் ஏற்று உண்ணவேண்டும். அந்நிவேதனத்தை ஒரு பெண் அன்புடன் ஏற்று உண்டால், அவள் உறுதி யான மலடியாக இருந்தாலும் இறைவர் அருளால் நன்மகவைப் பெற்று மகிழ்வாள். இந்த உண்மையை இறைவர் அருளிய சிவாகமங்கள் யாவும் தெளிவாக வரையறைசெய்து கூறுகின்றன. ஆகவே, விடமுண்டு கறுத்த கண்டனாகிய பெருமான் திருவிழாவில் நிவே தனம் உண்போர் உறுதியாக மகப்பேறு அடைந்து இன்புறுவர் என்கின்றார்.

இப்பாடலால் சிவாலய நிவேதனப்பொருளினது சிறப்பும், அதனை அன்புடன் ஏற்று உண்போர் அடையும் பலனும் இன்னது என வரையறைசெய்து கூறுகின்றார். 36

திருவிழாவில் நாடோறும் வலம்வரும் பலன்

ஏற்றுக் கொடியோன் ஆலயத்தில்
யாதோர் காலம் வலம்புரிவோர்
மாற்றற் குரியார் எழுபிறப்பின்
வதிந்த பாவம் அத்தினத்தில்
போற்றி நாளும் விழவின்வலம்
புரிவோர் மேலா முருத்திரராய்த்
தோற்றித் திகழ்வர் உண்மையெனச்
சொல்லுஞ் சுருதி சிவாகமமே.

பொ-ரை: வேதங்களும் சிவாகமங்களும் இறைவரால் அருளிச்செய்யப்பட்டன. அவை யாவும் இறைவனின் மேலான புகழினையே பேசுகின்றன. இடபக் கொடியோனாகிய இறைவனின் ஆலயத்தை அடைந்து நாள்தோறுமோ, அன்றி ஒரு குறிப்பிட்ட காலமோ வலம்வருவோர் எதையும் எண்ணியபடி மாற்றும் ஆற்றலை அடைவர். வினைவயத்தால் அவர்கள் அடைந்த ஏழு பிறவிகளிலும் ஏற்பட்ட பாவம் வலம்வரும் அந்த ஒரு தினத்திலேயே அழிந்துபோம். இறைவன் புகழை எண்ணிப் போற்றித் துதித்து, அவனுடைய திருவிழாவில் ஒவ்வொரு நாளும் அவ்விறைவனுடன் வீதி வலம் வருவோர் எல்லாப் பேற்றினும் மேலாம் உருத்திரப் பேறு அடைந்து இன்புறுவார்கள். இவ்வாறு பேறு அடைதல் உண்மையென்றே சுருதியும் ஆகமங்களும் அறைகின்றன. ஆகவே, திருவிழாக் காணவருவோர்

இறைவன்பின் சென்று வலம்வரல்வேண்டும் என்ற உண்மை விளக்கப்படுகின்றது.

திருவிழாவில் இறைவனை அலங்கரித்து அழகு செய்வது மக்களாகிய நம்பொருட்டேயாம். 37

ஏகாங்க நமஸ்காரம் முதலாகிய அஷ்டாங்க நமஸ்காரம்

சிரமே காங்கம் வலக்கரத்தைச்
சிரத்தில் குவித்தல் துவிதாங்கம்
சிரமேல் வாம கரத்தினையுஞ்
சேர்த்தல் திரிவி தாங்கமதாம்
சிரநீள் கரஞ்சா னுக்கள்நிலந்
தீண்டல் பஞ்சாங் கமதாகும்
சிரமோ வாய்கா துகைசானு
செகத்தில் படிதல் அட்டாங்கம்.

பொ - ரை : தலையால்மட்டும் இறைவனை வழிபடுதல் ஏகாங்க நமஸ்காரம். தலையின்மேல் வலக்கரத்தைக் குவித்து வணங்குதல் துவிதாங்க நமஸ்காரம். தலையின்மேல் இடப்புறக் கரத்தைச் சேர்த்துக் குவித்து வணங்குதல் திரிவிதாங்க நமஸ்காரம். சிரம், கை முதலியன நிலத்தில் பதியுமாறு வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம். தலை, மோவாய், காது இரண்டு, கை இரண்டு, கால்கள் ஆகிய உறுப்புக்கள் முழுதும் நிலத்தில் தோயுமாறு வணங்குதல் அட்டாங்க நமஸ்காரம்.

இப்பாடலால் வழிபடும் முறை விளக்கப்பட்டுள்ளது. ஒரு அங்கத்தால் வழிபடல் ஏகாங்கம், இரண்டு அங்கங்களால் வழிபடல் துவிதாங்கம், மூன்றுறுப்புக்களால் வணங்குவது திரிவிதாங்கம், ஐந்துறுப்புக்களால் வணங்குவது பஞ்சாங்கம், எட்டுறுப்புக்களால் வணங்குவது அட்டாங்கமாகும் என்பதாம். 38

நமஸ்காரபலன்

அறைந்த அங்கம் ஐந்துவிதத்
　　தாலும் அநாதி அவற்றிலின்றே
துறந்த ஞான வானந்த
　　சோதி பாதம் தொழுதெழுவோர்
சிறந்த உலகின் மேலோர்மெய்ச்
　　சிறப்புற் றிறைஞ்சத் திகழ்ந்துவளம்
நிறைந்த சாலோ காதிபலன்
　　நெறியால் நுகர்ந்து நிலவுவரே.

பொ-ரை : சொல்லப்பட்ட அங்கங்களைக்கொண்டு ஐந்துவிதத் தன்மையால் இறைவரை ஏத்தவேண்டும். இறைவரோ அநாதி. அந்தப் பொருளிடத்திலிருந்தே ஞானம், ஆனந்தம், ஒளி யாவும் தோன்றும். இதனை அருள்செய்பவன் இறைவன். அவன் இணையடிகளைத் தொழுது எழவேண்டும். அவ்வாறு வழிபடுவோமானல் சிறந்த உலகங்களிடைச்சென்று மேலான உண்மைச் சிறப்பை அடைவர். அல்லாமலும், அவர்கள் வளங்கள் நிறைந்த சாலோகாதி பலன்களை முறையாக அனுப வித்து என்றும் மாருத இன்ப உலகிடை நிலவுவர். ஆகவே, இறைவனை முறைப்படி பணிந்து வணங்கு வோர் முடிவில் சாலோகம் முதலிய மேலான இன்பத் தைப் பெற்றுக் களிப்புற்று வாழ்பவராவார். 39

சிவாலயத்தைத் தினமும் மூன்று வலஞ்செய்யும் பலன்

பாசப் பகைவன் பசுபதிஎம்
　　பரமன் உறையும் ஆலயத்தில்
நேசத் துடனே சென்றிறைஞ்சி
　　நித்தம் மூன்று வலம்புரிந்து

பேசற் கரியோன் திருமுன்னர்ப்
பிறங்க விருந்த பெருந்தவத்தோர்
ஆசற் றிலகு சாமீபம்
அடைவ ரிதுசத் தியமாமால்.

பொ - ரை : இறைவன் பதி. ஆன்மாக்கள் பசு. இந்தப் பசுவை ஆட்கொள்வதால் இறைவன் பசுபதி என்னப்பட்டான். பசுவைப் பற்றிநிற்பது பாசமாம். பாசத்தை ஒழிப்பவன் இறைவன். அதனுல் அவனே பாசப் பகைவனுவான். அவனே நமது பரமன். அவன் உறையும் ஆலயத்தை முதலில் அன்புடன் அடைய வேண்டும். அடைந்து இறைஞ்சுதல் வேண்டும். இறைவனுடைய ஆலயத்தை மூன்றுமுறை வலம்வர வேண்டும். அவ்வாறு வலம்வந்தபின்பு பேசற்கரிய பிஞ்ஞகன் திருமுன்னர் செல்லவேண்டும். இவ்வாறு வழிபட்டோர் குற்றம் நீங்கப்பெறுவர். எளிதில் சாமீப பதம் அடைவர். இது உறுதி.

ஒவ்வொருவரும் சிவாலயத்தை அடைந்து மூன்று முறை வலம்வரல்வேண்டும். சாமீபபதம் அடைதல் இதனுல் எளிது என்கின்ருர். இது ஆகமத்தின் சத்திய மான வாக்கு என்கின்ருர். 40

சிவயோகி தங்குமிடத்தின் பலன்

பரவும் இரவோர் பகல்பன்மூற்
பாகம் ஒருநாள் இருநாளா
தரவு பெருகும் சிவயோகி
தங்கும் தலம்யா தத்தலமே
கரவில் தவமும் தருமமுமங்
கலங்க ளெவையும் ஆகமமும்
விரவு முயிர்க்காம் புனிதமுமம்
மேலோன் பெருமை விளம்பரிதே.

பொ - ரை ; ஒரு இரவு, ஒரு பகல், பகலின் மூற் பாகம், ஒரு நாள், இரண்டு நாள் ஆக ஆதரவு பெருகும் சிவயோகி தங்குமிடம் எதுவோ அத்தலமே வஞ்சனையில்லாத தவமும் தருமமுமாகிய மங்கலங்கள் யாவற்றையும் கொடுக்கும். மேலும், உயிர்க்குப் புனிதத் தன்மை அளிக்கும். ஆதலின், சிவயோகி ஒருவர் தங்கியிருந்த இடத்தின் பெருமையை ஒருவராலும் கூற இயலாது என்று ஆகமம் கூறுகின்றது. 41

சித்த மலமும் வினையுடலும்
  தீதென் றருளால் அநாதிமல
முத்தன் அடிக்கீ ழத்துவித
  முத்தி அடைந்த சிவயோகி
புத்தி யுடன்யா தோரிடத்தில்
  பொருந்தில் அரைநா ழிகையவனோ
பத்தி படச்செய் பாவமெலாம்
  பரிந்து கெடுதல் நிச்சயமே.

பொ - ரை - ஆன்மாக்களைப்பற்றி வருத்தும் மலமும், வினை காரணமாக ஏற்பட்ட உடம்பும், தீமையென்று சிவயோகி இறைவன் அருளால் அநாதி மல முத்தனாகிய ஆண்டவன் அடியின்கீழ் அத்துவித முத்தி அடைந்தவனாவான். அத்தகைய சிவயோகி இயல் பாகிய ஞானத்துடன் எந்த ஒரு இடத்தில் தங்கியிருந் தானோ அந்த இடம் புனிதமுடையதாகும். அரை நாழிகை அளவு அவ்விடத்தில் பத்தியுடன் தங்கியிருந் தால் நமது பழவினைகள் யாவும் நிச்சயமாகக் கெட் டொழிந்துபோம்.

இவ்விரு பாடல்களாலும் சிவயோகியின் பெருமை, அவன் தங்கியிருந்த இடத்தின் சிறப்பு, அவ்விடங்களை

ஆன்மாக்கள் அடைவதால் அடையும் பேறு ஆகிய யாவும் விதந்து கூறப்பட்டுள்ளன. இதனால் இறைவனுடன் இரண்டறக்கலக்கும் நிலை கூறப்பட்டுளது. 42

தீர்த்தத்தின் பலன்

அத்தன் இறைவன் அமலேசன்
அமரா லயத்தின் அருகுறுநீர்
சுத்த மசுத்த மாயினுநற்
சுரர்கள் பரவு கங்கையென்றே
புத்தி புரிந்தங் கத்தடத்தின்
புனலுட் படிவோ ரியாரேனும்
சத்த சனனத் துறுபாவம்
தணந்து சிறந்து தயங்குவரே.

பொ - ரை : மேலானவன், இறைவன், தேவர்கள் தேவன் ஆகிய இறைவனின் ஆலயத்தின் அருகில் உள்ளது தீர்த்தமாம். அத்தீர்த்தம் சுத்தமாயினும் அசுத்தமாயினும் அதனில் தேவர்கள் வந்து படிவர். அதனைக் கங்கையினும் மேலானதாகத் தேவர்கள் கருதுவர். அத்தகைய தீர்த்தத்தில் எவரொருவர் நல்லறிவுடன் நீராடுகின்றார்களோ, அவர்கள் எவராயினும் பல பிறவிகளில் செய்த பாவங்கள் நீங்கப்பெற்று உலகிடைச் சிறப்புடன் விளங்கிக்கொண்டிருப்பார்கள். 43

ஆசாரியர் திருவடிதீர்த்தத்தின் பலன்

சித்தும் அசித்தும் சித்தசித்தும்
தெளிந்த யோகம் அகம்பிரம
முத்தி யளிக்கும் தேசிகன்றன்
முளரிச் சரணுக் கிரத்துதித்த

சுத்த நேயம் தனைவாங்கித்
தொழுது சிரமேல் தெளித்தோர்தம்
புத்தி யுறுபா வாதிவினை
போமக் கணத்தில் திண்மைமதால்.

பொ - ரை: சித்து, அசித்து, சித்தசித்து ஆகிய மூன்றிலும் மேம்பட்டவர்களே தெளிந்த யோகியர்களாவார்கள். அக்குரவர்களது தாமரைமலர்போன்ற திருவடியில் தோன்றிய தூய தண்ணீரையேற்று அதனைத் தொழுது தலையில் தெளித்துக்கொண்டோர் தம் புத்தி பூர்வமாகச்செய்த பாவங்கள் யாவும் அக்கணத்திலேயே அழிந்துபோகும். இது உறுதியானது.

ஆகவே ஆசாரியன் திருவடி தீர்த்தம் முடிவில் எல்லா நலங்களையும் கொடுத்தருளும் என்பதாம்.

"கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே" என்னும் திருத்தொண்டர்புராணச் செய்யுளை இங்கு ஒப்புநோக்குக. 44

ஆசாரியர் கொடுக்கும் பரிகலத்தின் பலன்

பாச மகற்றும் தேசிகன்தான்
பரிவால் நுகர்ந்து மிகுசேடம்
விசு அன்னேன் நேசமுடன்
விதியி னருந்தும் மேலோர்கள்
ஓசை வடிவாம் சண்டேசன்
ஒப்புற் றுறைவ ரதல்லாற்
பேச அரிய பாதகமும்
பிரிப்பர் இவைசத் தியமாமால்.

பொ - ரை: ஆன்மாக்களின் பந்த பாசங்களை அகற்றுபவன் ஆசாரியன். அவ்வாசாரியன் அன்புடன் உண்டு எஞ்சிய பரிகல சேடத்தை அடியர்பால் விச அவற்றை விருப்புடன் ஏற்று விதிப்படி உண்டவர்கள் மேலானவர் ஆவார்கள். அவ்வாறு உண்டவர்கள் அடையும் பலன் சிறப்புடைய சண்டீசப் பதமாகும். அப்பதத்தை ஏற்று ஒப்புயர்வற்று விளங்குவார்கள். மேலும் சொல்ல இயலாத பாதகத்தையும் போக்கிக் கொள்வர் இது சத்தியம். 45

ஆசாரியர் திருவடிகளைப் பரிசிக்கும் பலன்

மானம் ஒழுக்கம் தவம்தானம்
வனப்போர் நான்கு வருணத்துள்
ஈன மின்றி இரண்டாமாச்
சிரமத் திருத்தல் இசைந்துசிவ
ஞான மதின்முப் பொருளுணர்த்தும்
நற்றே சிகன்தாள் பரிசித்தோர்
ஊன மான பாவமெலாம்
ஒழிவா ரெனநூன் மொழிவாரே.

பொ - ரை: மானம், நல்லொழுக்கம், தவம், தானமாகிய இந்நான்கும் மிக்க சிறப்புடையன. பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சன்னியாசி என்னும் நான்குபடிகளுள் குற்றமில்லாத இரண்டாமாச்சிரமமாகிய கிருகஸ்தன் நிலையில் இருந்து இசைவுடன் சிவஞானமாகிய பதி பசு பாசமென்னும் முப்பொருளுண்மைகளை உலகினர்க்குணர்த்தும் நல்ல ஞானாசிரியனின் திருவடிகளைத் தீண்டினோர், தங்களை இயல்பாகப்பற்றியுள்ள ஊனமான பாவங்கள் முழுவதும் ஒழிந்து மேலான இன்பம்பெற்று வாழ்வர். 46

சிவலிங்கதரிசன பலன்

தங்கம் கனக மேருவரை
        தானம் கொடுத்தல் சதகோடி
மங்குல் அளகக் கன்னியரை
        வளத்தின் அளித்த லொருகோடி
துங்கம் தருகோ டுடைத்தீம்பாற்
        சுரபி வழங்கல் துலங்குசிவ
லிங்கந் தனையே தரிசித்தோர்க்
        கெய்தும் பலத்துக் கிணையாமால்.

பொ - ரை : மேருமலை யளவு தங்கத்தைத் தானங் கொடுத்தல், சதகோடி கூந்தல் அழகு மிக்க கன்னியர் களைத் தானங்கொடுத்தல், கோடியளவினதான பசுக் களின் பாலைக் கறந்து கொடுத்தல் இத்துணைப் பலன் களும் விளக்கத்தோடு கூடிய சிவலிங்கத்தினைத் தரிசித் தோர்க்கு மிக எளிதில் கிட்டும் என்பதாம்.

சிவலிங்கதரிசனம் தங்கதானத்தைக் காட்டிலும், சதகோடி கன்னிப்பெண்களைத் தானங்கொடுத்தலைக் காட்டிலும், ஒரு கோடி பசுவின் பாலைக் காட்டிலும் மேலான சிறப்பினை ஆன்மாக்கட்கு அளிப்பது. 47

சிவலிங்கத்தைப் பரிசிக்கும் பலன்

ஈசற் கன்பாய் அவனிலங்கும்
        இலிங்க மதனைப் பரிசித்தோர்
மோசித் திடுவர் பாவமெலாம்
        மூல மலமும் முடித்தருளால்
பேசற் கரிய ஆனந்தம்
        பெறுவார் இறவாப் பிரான்கழற்கீழ்
ஓசைக் குளிகை யுறக்களிம்பற்
        றுலோகம் பொன்னு முறைமைபோல்.

பொ - ரை : இறைவனிடத்திலே அன்புகொண்டு அவ்விறைவனிருக்கின்ற இடத்தையடைந்து அங்கு உள்ள சிவலிங்கத்தைத் தீண்டினோர் தங்கள்பாவத்தை ஒழித்தவராவார். தன்னைப்பற்றிய மூலமலங்களையும் போக்கிக் கொள்வர். இறைவனருளால் சொல்லமுடியாத ஆனந்தத்தை அடைவர். இறவாப்பெருமானாகிய இறைவனது திருவடியின்கீழ், ஒளியைக் கொடுக்கும் குளிகை சேரச் செம்பில் களிம்பற்றுப் பொன்னாவது போல் ஆன்மத்தூய்மை பெறுவர். 48

அருச்சனையின் பலன்

நிலத்தில் திகழ்ந்த நறுமலரும்
நீருற் பவித்த போதெவையும்
புலத்தின் அழுந்தா அன்பினொடும்
போதானந்தன் கழற்க ணிந்தோர்
மலத்தி னநாதி முத்தன்மல
வயிரி உறையுஞ் சிவலோக
தலத்திற் புகுந்து நலத்தகைய
தலைவ ராகி நிலவுவரால்.

பொ - ரை : நிலத்திடைச் சிறந்து விளங்கும் நறுமணமுள்ள மலரும், தண்ணீரில் தோன்றி மிளிரும் நன்மலருங்கொண்டு, அறிவொடு பொருந்திய அன்பினொடும், என்றும் இன்பவடிவினனாக எழிலுடன் விளங்கும் இறைவனது திருவடியில் அணிந்து அருச்சனை செய்து வழிபட்டோர், மலரகிதனும் அநாதி முத்தனும் ஆன்மாக்களிடத்துள்ள மலங்கள் சிவசம்பந்தத்தால் நீங்குவதால் மலப்பகைவனுமாக விளங்குகின்றவனுமாகிய இறைவன் வதியும் சிவலோகத்தை அடைந்து, எல்லா நலங்களும் பெற்றுச் சிவகணத் தலைவராகி வாழ்வார். 49

இந்தப்புட்பம் அர்ச்சனைக்கு ஆகும் என நினைக்கும் பலன்

இறைவன் அமலன் தனக்கென்றே
யாதோர் தலமுற் றிலகுமிகு
நறைகொள் மலரை அகமலர
நயந்து மதிக்கில் எவரேனும்
முறையின் அவர்க்கும் மதிப்பதனால்
மூல மலமற் றேகமதா
மறையின் முடிவின் விட்டின்பம்
வழங்கும் வழியின் பொருட்டாமால்.

பொ - ரை : பரிசுத்தரான இறைவனுக்கு என்று எந்த ஒரு தலத்தினை அடைந்து, மணம்மிக்க மலர்களை உள்ளம் மலர விரும்பி வழிபடுவாரானால் அவர் எத்தன்மையர்களாயினும் இறைவர் முறையாக வழிபட்ட அவர் தன்மையை நினைத்து, அவரது மூலமலக்கட்டை அறுத்து ஒன்றுந்தன்மையை வற்புறுத்தும் வேத முடிவாகிய வீட்டின்பத்தை வழங்குவார். வீட்டின்பத்தை அடைவதற்கு இதுவே நல்ல வழியுமாகும். 50

நந்தனவனம் வைக்கும் பலன்

தேவ தேவன் தனக்கன்பால்
சிறப்பு மிகுந்த நறுமலர்ப்பூங்
காவை மகிழச் சமைத்தளிக்கும்
கருணை யுடையோர் யாவரவர்
பூவின் மடந்தை கனகமிகப்
பொருந்தி உலகின் அந்தியத்தில்
பாவி ளிலங்கும் உருத்திரர்தம்
பதம்பெற் றிருப்பர் பணியகன்றே.

பொ - ரை : தேவர்கட்குத் தலைவனாகிய இறைவனிடத்து அன்புகொண்டு சிறப்புமிக்க நன்மலர்களைக் கொடுக்கும் பல பூஞ்சோலைகளை இறைவருக்கு என்று அமைத்துக் கொடுத்தோர் கருணையை இறைவர் ஏற்று அவர்கட்குத் தாமரைமலருள் உறையும் இலக்குமியின் அருளால் தங்கம் முதலாகிய எல்லாப் பொருள்களும் நிறையுமாறு அருள்செய்து உலகிடை மிகப்புகழுடன் வாழச்செய்வர். முடிவில் நல்ல விளக்கத்தையுடைய உருத்திர உலகம் அடைந்து அப்பதத்தைப் பெற்று இன்புற அருள்செய்வர். நந்தனவனம் வைத்தோர்கள் அடையும் பலன் அளவிடற்கரிய ஒன்றும். 51

பசுவிற்குப் புல்கொடுக்கும் பலன்

இரவி எழுமுற் காலத்தின்
எழுந்தோர் பிடிபுற் பறித்தன்பால்
பரவி அரிய சுரபிகட்குப்
பரிந்து கொடுத்த பெருந்தவத்தோர்
விரவும் வறுமை யாவைகளும்
விரவா தொழிந்தே வெண்மதியும்
அரவும் அணியும் மணிமுடியோன்
அமருஞ் சிவலோ கத்தடைவார்.

பொ - ரை : சூரியன் தோன்றுவதற்கு முன்னாகிய வைகறைப்பொழுதிலே ஒருவர் துயில் எழவேண்டும். துயில் எழுந்தவுடன் தங்கள் நாட்கடன்களை முடித்துக் கொள்ளல்வேண்டும். அதன் பின்னர், கையினால் ஒரு பிடி அறுகம்புல் பறிக்கவேண்டும். அப்புல்லைப் பசுவை வணங்கி அன்புடன் அதற்கு ஊட்டுதல் வேண்டும். இவ்வாறு முறையாக ஊட்டினோர் பெருந்தவத்தினை உடையவர் ஆவார். இத்தவச்சிறப்பால் அவர்களைப் பற்றிக் கலந்துறையும் வறுமை முதலாய அனைத்துத்

துன்பங்களும் நீங்கும். அவை நீங்கிய அந்நிலையில் பிறைச்சந்திரனையும் பாம்பையும் அணியாகக்கொண்ட சடை முடியையுடைய இறைவர் உறையும் சிவலோகம் அடைந்து இன்பமுடன் அவர்கள் வாழ்வார்கள். 52

சிவயோகிக்குப் பிச்சையிடும் பலன்

விச்சை நான்மறை வேதியர் கோடிபேர்க்
கிச்சை யோடனம் ஈபலன் யாவையும்
நிச்ச யம்மொரு நீள்சிவ யோகிகைப்
பிச்சை யிட்ட பெரும்பயன் நல்குமால்.

பொ-ரை: நான்மறைகளில் வல்ல பிராமணர் ஒருகோடி அளவினர்க்கு விருப்பத்தோடு உணவிட்ட பலனை, உறுதியாகச் சிவயோகி ஒருவர் கையில் அன்புடன் பிச்சை இடுவதால் அடையலாகும். சிவயோகி பிராமணரினும் மிக மேலானவர் என்பதாம்.

இதனை "அகரமாயிரம் அந்தணர்க்கு ஈயிலென், சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென், பகரும் ஞானி பகல்ஊண் பலத்துக்கு, நிகரில்லை என்பது நிச்சயந் தானே" என்னும் திருமந்திரத்தால் அறியலாம். 53

பசுவின்பால் அபிஷேக பலன்

கோவின் பேர்பெறு தீர்த்தங் குறுகியே
ஆவி னம்பதி னுயிரம் பன்மறை
மேவும் வேதியர்க் கீபலம் விசுமால்
ஆவின் பாலிறைக் காட்டிடு மன்பர்பால்.

பொ-ரை: இறைவர் உறையும் திருக்கோயிலுக்கு முன்னுல் உள்ள தீர்த்தத்தை அடைந்து அத்தீர்த்தக் கரையில் பதினுயிரம் என்ற அளவுள்ள பசுக்களைப்

பல மறைகளை ஓதிய பிராமணர்கட்குத் தானங்கொடுப்பதால் ஒருவர் அடைகின்ற பலனை, பசுவின் பாலை இறைவனுக்கு அன்புடன் ஆட்டுவதால் அடைந்து விடலாம். 54

பஞ்சகௌவிய அபிஷேக பலன்

கொன்றை வேணிக் குழகனுக் கன்பினால்
வென்றி ஆவினைந் தாட்டும் வியப்பினோர்
பொன்ற யங்குவி மானம் பொருந்திவான்
ஒன்றி வாழ்வர் உருத்திர லோகமே.

பொ - ரை : கொன்றைமலர்மாலை அணிந்த சடைமுடியையுடைய இறைவருக்கு அன்பினால், வெற்றி மிக்க பசுவினிடத்துள்ள ஐந்தைக்கொண்டு அபிடேகம்செய்தோர், ஒளிவிளங்கும் இந்திரவிமானத்தில் ஏறி, தேவருலகடைந்து இன்புற்று, அதன்மேல் உருத்திரலோகம் அடைந்து ஒன்றி வாழ்வர். 55

துய்ய காபில கௌவியம் சோதிசேர்
செய்ய லிங்கந் திகழ்பாணி வட்டமட்
டுய்யு மாறுள்ள மாத்திரம் ஆட்டினோர்
குய்ய ருத்திர லோகம் குறுகுவார்.

பொ - ரை : பரிசுத்தமான பசுவின் பஞ்சகௌவியத்தை, ஒளியுடன் விளங்கும் சிவலிங்கத்துக்கு அபிடேகம் செய்தோர், தங்கள் உள்ளத்தின் தூய்மையால் உருத்திரலோகம் அடைந்து இன்புறுவர்.

இந்த இரண்டு பாடல்களாலும் பஞ்சகௌவியச் சிறப்பும், அதனை உள்ளன்போடு ஆட்டுவோர்எய்தும் பயனும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. 56

ஸ்தபன பலன்

விதியி னுலிறைக் காட்டல் விரும்பிநீர்
வதியு நற்றப னம்பல வைத்துளோர்
புதிய போகங்கள் யாவும் பொருந்தியே
அதிக ருத்திர லோக மடைவரால்.

பொ - ரை : இறைவர்க்கு முறைப்படி அபிடேகஞ் செய்ய அன்புடன் அதற்கு ஏற்ற செயல்களைச் செய்து முடித்தவர்கள், புதிய இன்பங்களனைத்தையும் பெற்று, அதிகமாகிய உருத்திரலோகத்தை அடைவர்.

இதனுல் இறைவருக்கு அபிடேகத்திற்குவேண்டிய நீர் கிடைப்பதற்குரிய வழிவகைசெய்தோர் அடையும் மேலான பலன் கூறப்பட்டுள்ளது. 57

திருமஞ்சன பலன்

கந்த மாமலர் நாற்றம் கமழூறிச்
சிந்தும் வெண்டிரை யாற்றினுட் சீதநீர்
பந்த நீக்கும் பசுபதிக் காட்டினேர்
வந்து ருத்திர லோகம் வழங்குவார்.

பொ - ரை : மணமுள்ள மலர்கள் சிறந்து விளங்கும் இடத்திலிருந்தும், அம்மலர்கள் சிந்தும் அலைகளோடு கூடிய ஆற்றிலிருந்தும் குளிர்ச்சிமிக்க திருமஞ்சனநீரைக் கொணர்ந்து, நமது பந்தங்களைப் போக்கியருளுகின்ற பசுபதியாகிய இறைவருக்கு முறைப்படி அபிடேகஞ்செய்தோர்க்கு இறைவர் தாமாகவேவந்து உருத்திரலோகத்தை வழங்குவார். 58

சிவார்ப்பிதபலன்

வருந்தி யாற்றிய வான்தரு போகங்கள்
அருந்து முன்னர் அமலற் கறிவொடும்
பொருந்த நல்கிலப் போகங்கள் யாவையும்
திருந்தி நாளும் சிறப்புற மல்குமால்.

பொ - ரை : ஆன்மாக்களாகிய நாம் மிக வருந்தி முயன்று தேடிய பொருள்களும், அப்பொருள்களால் அடையும் இன்பங்களும் ஆகிய அனைத்தையும் நுகருவதற்கு முன்னர், இறைவர்க்கு நல்ல அறிவோடு மனமொன்ற உண்ணும் உணவைச் சிவார்ப்பிதம் என்று அளிக்கவேண்டும். அவ்வாறு அனைத்தும் இறைவர்க்கென்று சொல்லிப் பின்னர் தான் உண்ணவேண்டும். அவ்வாறு உண்டோமானால், எல்லாம் திருந்தப்பெற்று நாளும் சிறப்புற்று வாழ்வோம். 59

பூசிக்கத்தக்க மூர்த்தங்கள்

மானதமன் டலங்கணிகம் பலகைபடம் பித்தி
வரைந்திடுசித் திரமிரதம் வேரமென வகுத்த
தானமிவை யோரெட்டும் ஒன்றுக்கொன் றதிகம்
தண்படிகம் வாணலிங்கம் சாற்றுமிவற் றதிகம்
ஞானமய லிங்கத்தில் அரனைப்பூ சிப்போர்
நல்தீர்த்தம் தானமக மரும்பலங்க ளெவையும்
ஈனமுறு பலபாவம் எரித்திடும்புண் ணியமும்
எய்திடுவ ரிவர்க்கொழிவாம் பாவவிதம் மொழிவாம்.

பொ-ரை : மானதம், மண்டலம், கணிகம், பலகை, படம், பித்தி, எழுதப்படுகின்ற சித்திரம், இரதம், வேரம் என்று வகுக்கப்பட்ட இறைவர்க்குரிய இடங்கள் எட்டாம். இவைகள் முறையறிந்து பூசித்தால் ஒன்றுக்கு

ஒன்று மேலான சிறந்த பலனைத் தரும். அல்லாமல் படிகலிங்கம், பாணலிங்கம் இவ்விரண்டும் மேற்சொன்னவைகளிலும் மிக அதிகம். அன்றியும் ஞானமயமான இலிங்கத்தில் அதனைப் பூசைசெய்வோர், நல்ல தீர்த்தம் தானம் வேள்வி ஆகியனசெய்த பலன்கள் அனைத்தையும் பெற்று, இழிவாகிய பாவங்களை அழித்துச் சிவபுண்ணியத்தை அடைவர். இவர்கள் எவ்வாறு தங்களைப் பற்றி இருக்கும் பாவங்களைப் போக்கிக்கொள்வார்கள் என்பதை அடுத்த பாடலில் சொல்லுவாம் என்கின்றார். 60

சிவபூசையின் பலன்

செந்தழல்வே தியர்க்கொன்றோர் தேசிகனைப்
பிழைத்தோர்
தேனுவினை அறுத்தோர்கள் செய்ந்நன்றி
செகுத்தோர்
தந்தைதாய் தனைப்புதல்வன் தனைத்தமையன் தனையும்
தனுவினின் றுயிரொழித்தோர் தமனியமும்
கவர்ந்தோர்
அந்தமின்மித் திரரறவோர் ஆண்மையினிற் சிறந்தோர்
ஆக்கைதடிந் தோர்குரவன் மனையயலார் மனையும்
பந்தமுற அணைந்தோர்மா பாதகத்தோ ரேனும்
பரமனைவந் திக்கிலந்தப் பாவமெலாம் அறுமே.

பொ - ரை: செந்தீவேட்கும் பிராமணனைக் கொன்றோர், ஆசாரியனுக்குத் தவறு இழைத்தோர், பசுவைக் கொலைசெய்தோர், செய்நன்றியை மறந்தவர்கள், தாய் தந்தை தமையன் புதல்வன் ஆகியோர்களைக் கொன்றோர், நிலங்களைக் கவர்ந்தோர், நண்பர் அறவோர்

ஆண்மையில் மிக்கோர் இவர்களது உடல்களை அழித்தவர்கள், ஆசாரியன்மனைவி, அயலான்மனைவி இவர்களைத் தவருக எண்ணியவர்கள், மாபாதகம்செய்தோர் யாவரேயாயினும் இறைவனை வழிபட்டால் அவர்கள் செய்த பாவங்களனைத்தும் ஒழிந்துபோகும். இதுவும் மேற்பாடலும் ஒருமுடிபு. 61

ஆலயத்தில் சிவலிங்கத்தைத் தரிசிக்கும் பலன்

அற்பமகத் துவம்வறியோர் அதிகதன முடையோர்
அளித்தவர்க்குப் பலஞ்சமமா மாதலினல் விதான
கற்புடைய விதியினராய் ஒருபொழுதா லயத்தில்
கண்ணுதல்தன் திருமுன்னர்க் களிப்புடனேத் தினர்
பொற்புடைய பலபோகம் செல்வங்க ளெவையும் [தாம்
பொருந்தியிக லோகத்திற் போதகமுற் றிருந்தே
அற்புதமெய் யந்தியத்தி லடைவர்முத்தி எனவே
அநாதிமுத்தன் மலவயிரி அறைந்தனனு கமத்தே.

பொ - ரை: அற்பமான பெருமையுடையவர்கள், வறியர், மிக்க செல்வமுடையவர்கள் ஆகிய இவர்கள் இறைவனை வழிபட்டால் அடையும் பலன் சமமானதாகும். ஆதலின் மேலான நல்லொழுக்கமுடையவராய் ஒருபொழுது ஆலயத்தையடைந்து நெற்றிக்கண்ணையுடைய இறைவன் திருமுன்னர் மகிழ்வுடன் வழிபாடு செய்கின்றவர்களின் பாவங்கள் நீங்கி அழகிய போக போக்கியங்களும் செல்வங்களும் பொருந்தி இவ்வுலகிடை எல்லா நலங்களும் பெற்று வாழ்ந்து, இறுதிக் காலத்தில் அற்புதமான முத்தியை அடைவர். இவை யாவும் உறுதியென்று இறைவன் ஆகமத்தில் அருளிச் செய்துள்ளான். 62

எதி, பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன் இவர்களுக்குக் கொடுக்கும் தானபலன்

எதிபிரம சாரிகிருகி எழில்வனத்தில் உறைவோன்
என்னுமிவர் ஞானியோ கக்கிரியா தியானத்
ததிகதவ முடையரிவ ராதலினவ் வவர்பால்
அருளினவ ரவர்க்கேற்ற தானமளித் திடில்வான்
கதிருதய வரவுலகில் இருளகலு மாபோல்
கழிந்தகலும் வறுமையெலாம் ஒழிந்திடிலவ் வவர்க்
புதியதன தானியம்புத் திரபௌத்தி ராதி [கே
புங்கமுறு போகமெலாம் தங்கியுறும் தானே.

பொ - ரை : சந்நியாசி, பிரமசாரி, இல்லறத்தான், வானப்பிரஸ்தன் என்னும் இந்நான்கு படியினரும், ஞானம், யோகம், கிரியை, தியானம் இவற்றிற்சிறந்து அதிக தவமுடையவர்களும் ஆகிய இவர்களின்தன்மை அறிந்து அவரவர்கட்கேற்ற தானங்களைக் கொடுத்துச் சிறப்பித்தால், விண்ணில் சூரியன்தோன்ற இருளகலு மாறுபோல. நம்மைப் பற்றியுள்ள வறுமையெல்லாம் அகன்றுவிடும். அவ்வாறு அகன்ற பின்னர் அவர் கட்குப் புதிதாகத் தனம் தானியம் புத்திரர் பௌத் திரர் ஆதியாய மேலான போகங்கள் யாவும் எளிதில் கிட்டும் என்பதாம். 63

சங்கு, வாத்தியம், சாமரை, வாள், கண்ணடி, குடை, ஆடை, பொன், தாம்பிரபாத்திரம் இவற்றின் பலன்

தழங்குசங்கு பல்லியஞ்சா மரைவாள்கண் ணடி
சத்திரம்வத் திரம்கனகம் தாம்பிரபாத் திரமும்
முழங்குநதி மதியிதழி முடிக்கணிந்த பெருமான்
முன்னருறப் பணிந்தெழுந்து மொழிந்திடுநான் [முறையே

வழங்குவோர் தமைமுன்னுள் வருத்திடுநல் குரவு
மாற்றியக மகிழ்வுறப்பின் மல்குவளம் நுகர்வர்
பழங்கனிருள் ஒளியகன்ற வுயிர்க்குயிராய் நிறைந்த
பரமசிவ னுருத்திரன்றன் பதிபெறலுண் மையதால்.

பொ - ரை : ஒலிக்கின்ற சங்கு, பலவாத்தியங்கள், சாமரம், வாள், கண்ணாடி, குடை, ஆடை, பொன், தாமிரபாத்திரம் இவைகளைக் கொடுத்து, ஒலிக்கின்ற கங்கை சந்திரன் கொன்றைமாலை ஆகியவைகளைத் திருமுடியில் அணிந்துகொண்டுள்ள சிவபெருமான் முன் பணிந்து எழுந்து, நூல்கள் சொல்லிய முறைப் படியே வணங்குபவர்கள் தங்களைப் பழமையே வருத் தஞ்செய்யும் வறுமை முதலியவற்றை மாற்றி அகம் மகிழப் பற்பல வளங்களைக் கொடுத்து நுகருமாறு செய்வர். இருளகல ஒளி தோன்றுமாறுபோல, உயிர்க் குயிராக விளங்கிக்கொண்டிருக்கும் பரமன் அருளால் உருத்திரலோகத்தை அடைவர். இது உண்மை. 64

சிவபெருமானுக்காக மணிகொடுப்போர் அடையும் பலன்

ஆறு வேணி அமலற்கு மண்டபத்
தேறு மாமணி தூபத் தெறிமணி
கூறி ஈந்தவர் கூறரும் செல்வமும்
வீறு தேசமும் கீர்த்தியும் மேவுவார்.

பொ - ரை ; கங்கையைச் சடைமுடியில் வைத்து அருள்செய்யும் இறைவனார் திருக்கோயிலில் மணி மண்டபம் தனியேயமைத்து அதில் ஒலிமிக்க சிறந்த மணியும் அமைத்தோர், சொல்லமுடியாத செல்வமும், பெருமை மிக்க நாடும், புகழும் பெற்று உலகிடைப் பொருந்தி வாழ்பவராவர்.

இதனால் இறைவனுக்கு மணிமண்டபம் அமைத்து மணிவாங்கி அளித்தவர் அடையும் பயன் கூறப்பட்டுள்ளது. 65

சிவபெருமானுக்கு ஆதனம், சயனம், வாகனம், சிவிகை கொடுப்போர் அடையும் பலன்

ஆத னம்சய னம்மரி யானமும்
ஏத மில்சிவி கைமுத லின்புற
நாத னுக்குக் கொடுத்த நலத்தினால்
ஓத லுற்றசா மீப முறுவரால்.

பொ - ரை: இறைவருக்கு இருக்கை, சயனம், ஊர்ந்துசெல்ல வாகனம், குற்றம் இல்லாத சிவிகை ஆகிய இவைகளை மனம்மகிழ்ந்து கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுத்தோர், கொடுத்தசிறப்பினால் இறைவனது நூல்கள் அருளுகின்ற சாமீபபலனைப் பெற்று உயர்வார்கள். 66

நாடகசாலை, திருமதில், கோபுரம், மண்டபம் முதலியன சிவபெருமானுக்காகக் கட்டுவிப்போர் அடையும் பலன்

திருவ ரங்கு திருமதில் கோபுரம்
மருவு மண்டபம் வானவர்க் கன்பொடு
கருவ ரம்பறக் கண்டவர் கண்ணுதல்
உருவம் நன்குற மேவுவர் உண்மையே.

பொ - ரை: இறைவனது ஆலயத்தில் நாடகசாலை அமைத்தோர், ஆலயத்துள் திருமதிலைக் கட்டினோர், திருக்கோபுரம் அமைத்தோர், உள்ளுறைமண்டபங்கள் கட்டினோர் ஆகியோர் இறைவன்பால் என்றும் அன்பு உடையோராவார். அவ்வன்பு காரணமாக இறைவர்

அவர்களது பிறவித்துயரத்தைப் போக்குவர். அந்தத் துன்பம் நீங்கப்பெற்றநிலையில் அவர்கள் இறைவரது திருமேனியை மனத்தினுள் பதித்து நன்ருக வாழ்வர் என்பது உண்மையாம். 67

சிவபெருமானுக்குத் திருவாபரணம் தீப தூபங்கள் கொடுக்கும் பலன்

கலன்க ளாதியும் கற்கர டாதியும்
பொலன்கொள் தீபகந் தாதியும் புங்கவற்
கிலங்க வேயளித் தோர்நில னின்மிசை
நலங்கள் துய்த்துநற் றேவினை நண்ணுவார்.

பொ - ரை: சிவபெருமானுக்குத் திருமேனியில் அணிவதற்குத் திருவாபரணம்முதலியன அளித்தோர், தூப தீபங்கள் வாங்கி அளித்தோர் ஆகியோர் புங்கவ னருளால் இந்த நிலவுலகத்தில் எல்லா நலங்களையும் அனுபவித்துத் தேவருலகத்தை அடைந்து இன்புடன் வாழ்வார்கள். 68

சிவபெருமானுக்குப் பூமி கொடுப்போர் அடையும் பலன்

வளங்கொ ளோர்பசு வின்னதள் மாத்திரம்
விளங்கு பூமி விமலற்கு நல்கினோர்
உளங்கொள் தீவினை யாவு மொரீஇயவர்
தளங்கொள் தான பலங்களும் தாங்குவார்.

பொ - ரை: ஒரு பசுவின் அதளளவு வளம் மிக்க நிலத்தை இறைவருக்கு என்று அளித்தவர்கள், உள் ளத்து உறையும் தீவினைகள் யாவும் நீங்கப்பெற்று மேலான புண்ணிய பலன்களை அடைந்து இந்நில வுலகிடை நீடுவாழ்வர். 69

விளைநிலமும், சோலையும் சிவபெருமானுக்குக் கொடுக்கும் பலன்

நீரி னோங்கி நிறைவிளை பூமியின்
காரி னோங்கு கவின்பொழில் ஞானமார்
சீரி னோங்கு சிவன்தமக் கீந்திடில்
பாரி னோங்குபல் போகமும் பல்குமால்.

பொ - ரை : நீர்வளத்தோடு கூடிய விளை நிலமும், விண்ணளவு ஓங்கிய அழகிய பூஞ்சோலைகளும், ஞான வடிவாகிய இறைவருக்கு ஒருவர் அளிப்பாரானல் இந் நிலவுலகில் எல்லாப்போகங்களும் எளிதில் அவர்க்குக் கிட்டும் என்பதாம். 70

சிவவேள்வி செய்யும் பலன்

தேற்று நான்முறை யேசிவ யாகம
தாற்றி னோர்கள் அமலனுக் கன்பினல்
கூற்றின் மூவேழ் குலம்குழித் தீயினின்
றேற்றி வான்சிவ லோகத் திருப்பரால்.

பொ - ரை : தெளிந்த நூலின்வழியே சிவவேள்வி செய்தோர் இறைவனுடைய அன்பினல் எமவாதனை நீங்கப்பெற்று, சிவலோகத்தில் இனிமையாகவீற்றிருப் பார்கள். 71

சிவானந்தமடையும் பலன்

ஞான தேசிகன் நவிற்றிய ஞானயோ கதனல்
ஈன மின்றிய பத்தியால் இறையைமுன் னுணர்ந்த
மோன ஞானவா நந்தமா மூதுயி ரடைந்தோர்
ஊன மாமலக் குரம்பையின் மீண்டிவண் உதியார்.

பொ - ரை : ஞான ஆசாரியன் கூறிய ஞானயோக நெறிநின்று குறைவில்லாத பத்தியால் இறைவனை உணர்ந்த ஞானிகள் ஆனந்தமடைந்து, ஊனமாகிய மலக்குரம்பையை ஒழித்து மீட்டும் இந்த உலகிடைப் பிறவார். 72

சிவபெருமானுக்காக
வாவி, கூபம், தடாகம் வகுக்கும் பலன்

வாவி கூப தடாகங்கள் வகுத்துமேல் தனக்கோர்
கோவி லாதபேர்க் குரிசிலைக் குறித்தவை கொடுத்தோர்
தாவில் சீர்ப்பெருந் தனத்தொடும் தரணிமேல் தழைத்தே
சேவி னேங்கிய தேவினை அடைவரந் நியத்தே.

பொ - ரை : வாவி, கிணறு, குளம் ஆகியவைகளை இறைவருக்கென்று அமைத்து, தனக்கென்று ஒன்றுமில்லாத இறைவரைக் குறித்துக் கொடுத்தோர் குறைவில்லாத செல்வத்தோடு உலகிடைத்தழைத்து, இடபவாகனத்தையுடைய இறைவனுலகத்தை அடைந்து இன்புறுவர். 73

பார்வதியாரை அருச்சிக்கும் பலன்

இலைய தத்துவத் திலயியோ டிலயமுற் றிலங்கத்
தொலைவில் பேருயிர்க் கருவியாய்த் துரியமேல் நிறைந்த
தலைவி எம்பெரு மாட்டியைத் தாழ்ந்துநான் முறையே
நிலையில் நின்றருச் சித்துளோர் நிறைசிவத் துறைவார்.

பொ - ரை : தத்துவ வடிவினனாகிய இறைவனை உமாதேவியோடு சேர்த்து வழிபட்டோர், உயிர்கள் அடையும் பயனாகிய துரியநிலையை அடைந்து உலகத் தலைவியாகிய இறைவியைத் தாழ்ந்து பணிந்து, நூல்கள் சொல்லிய வழியில் நிலையாக நின்று அருச்சனை செய்து வழிபட்டவர் நிறைசிவனோடு உறைவர். 74

குரு லிங்க சங்கமத்துக்கெய்தும் இடையூறு அகலும் பொருட்டு உயிர்விடுவோர் அடையும் பலன்

குருவி லிங்கசங் கமத்தினைக் குறித்தவற் றிடையூ
றெருவு தற்பொருட் டாற்றம துயிர்விடும் உரவோர்
மருவி டும்பலம் எமக்குமே வளம்பட வகுப்பான்
அருமை என்றனன் அனைத்தையு முணர்த்துபே
[ரறிவோன்.

பொ - ரை : குரு, இலிங்கம், அடியார்கள் ஆகிய வர்களைக் குறித்து அவர்கட்கு இடையூறு செய்தோரை எண்ணித் தன்னுயிரைப் போக்கிக் கொண்டவர்கள், தங்கள் வலிமையால் எல்லா நலன்களையும் பெற்று வாழ்பவராவார். 75

குருத்த பத்தியும் இருவித நூன்முறை குறிக்கின்
வருத்த மற்றநற் சுபாவமும் கவடுமாய் வழங்கும்
தெரித்த முன்னைய திகபரத் தினிற்சுகம் சேரப்
பொருந்து மற்றது பரத்தினிற் சுகத்தினைப் புணர்க்கும்.

பொ - ரை : உண்மையான பத்தியும் நூல்கள் வகுத்த வழிமுறைகளையும் அறிந்து நல்ல எண்ணத் துடன் வாழ்வோர்க்கு இகத்திலும் பரத்திலும் என்றும் சுகத்தைப் பெற்று வாழும் நிலையை உண்டாக்கும் என்பதாம். 76

சிவலிங்கமிருக்குமிடமுதல் நூற்றைம்பது முழம் அளவுக் குட்பட்ட பூமியிலிறந்தவர்கள் அடையும் பலன்

துன்று சீர்ச்சிவ லிங்கமுன் றெடுத்துநீள் கரங்கள்
ஒன்று நூற்றைம்ப துறுமுழ முற்றநாற் றிசையும்
என்று மேற்சிவ லோகமே இவற்றுயிர் துறந்தோர்
சென்று சேர்வர்சா மீப்பியம் என்பது திடனே.

பொ - ரை : சிவலிங்கமிருக்குமிடமுதல் நூற்றைம்பதுமுழம்வரை சிவலோகமேயாம். அந்த இடத்திற்கு உள்ளோ அல்லது நூற்றைம்பதுமுழம் அளவுள்ள நான்கு திசைகளிலோ உயிர் துறந்தவர்கள் என்றும் நீங்காமல் சிவலோகமடைந்து சாமீப்பியநிலை எய்தி என்றும் இன்புறுவர். 77

புறச்சமயத்தார் அடையும் பலன்

பாட்ட மேபிர பாகரம் பௌத்தம்வே தாந்தம்
நாட்டு சாங்கிய மால்வயி ணவமுதற் பசுநூல்
தீட்டு தன்னகப் பொருளினைத் தெளிந்துளோர்க்கின்பம்
கூட்டு மேயிருஞ் சுவர்க்கத்தின் என்றுநூல் கூறும்.

பொ - ரை : பாட்டம், பிரபாகரம், பௌத்தம், வேதாந்தம், சாங்கியம், வயிணவமாகிய புறச்சமயிகள், பசுக்களாகிய ஆன்மாக்களுக்கு நன்னிலை அறிவிக்கும் உட்பொருளைத் தெளிவார்களாயின் அவர்களுக்குச் சுவர்க்க இன்பத்தையும் இறைவன் அளிப்பான். 78

ஆகமத்தின் பலன்

ஆதி ஐந்தொழில் ஆற்றிடா தாற்றுவோன் அணுவின்
போத காரிய மறைத்தவா ணவத்தினைப் போக்க
ஓது மாகமம் தன்னையுற் றுணர்ந்துளோர் தமக்கே
கோதில் புத்தியும் முத்தியும் கொடுத்திடும் மாதோ.

பொ - ரை : இறைவனே முதல்வன். அவனே ஐந்தொழிலாற்றுபவன். உயிர்கள்ஞானத்தை ஆணவ மலம் மறைக்கும். அவ்வாணவத்தினை அவன் போக்குவான். அவ்விறைவனால் சொல்லப்பட்ட ஆகமங்களை அறிந்தோர்கட்குக் குற்றமில்லாத புத்தியும் முத்தியும் கொடுப்பான். 79

கற்ற தேசிகன் அருளினுற் சிந்தியா கமத்தைப்
பற்றி னுளள முயற்சியால் பணிவொடும் பயின்ருேர்
பெற்ற தோரிந்தப் பிறப்பினில் பெருமலம் நீங்கிச்
சிற்று யிர்க்குயி ராகிய சிவத்தினுென் ருவார்.

பொ - ரை : கற்றறிவுடைய ஞான ஆசாரியனது நல்லருளினுல் சிந்தியாகமத்தை ஒருவன் குறைவறக் கற்ருல் கற்றவர்கள் இப்பிறப்பிலே தன்னைப்பற்றிய மலங்கள் நீங்கப்பெற்று, சிற்றுயிரையுடைய ஆன்மாக்கள் சிவத்தோடு கலந்து இன்புற்று வாழ்வார்கள். 80

கிலமான சிவாலயம் மடாலயம் சிவலிங்கம் புட்கரணி
முன்போலாகச் செய்விப்பவர்கள் அடையும் பலன்

மாதவர் மடங்க ளாதி ரைதன்மந் திரங்க ளாதி
நாதமா மிலிங்க மாதி நளினபுட் கரணி யாதி [லந்தான்
சேதமுற் றிடின்முன் போலச் செய்கின்ருேர்க் குறும்ப
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரம் குணித மோங்கும்.

பொ - ரை : பழுதடைந்த தவத்தினர் உறையும் மடாலயம், இறைவர் உறையும் கோயில், சிவலிங்கம், கோயிலைச் சார்ந்துள்ள தீர்த்தங்கள் ஆகியவைகள் பழுது அடைந்தால் அவைகளைப் பழுதுபார்த்து முன்போலச் செப்பஞ்செய்பவர்கள் அடைகின்ற பலன், ஆகமங்கள் ஓதியோர் அடையும் பலனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமாகும். 81

மேற்சொன்னவற்றில் பழுதான இடங்களைப்
பழுதறச் செய்விப்பவர்கள் அடையும் பலன்

உரைத்திடும் மடங்க ளாதி
உறுப்பிரிற் சிதையின் நூலில்
தெரித்திடு முறையே நன்ருய்த்
தெளிவுறச் செய்கின் ருேர்க்கு

வரைத்திடின் முன்னம் செய்தோர்
மருவிடும் பலத்தின் மேலாய்
விரித்திடும் பலமும் நூறு
மடங்கென இயம்பும் மாதோ.

பொ - ரை : மேற்கூறிய மடங்கள் சிவாலயங்கள் முதலியவற்றைச் சீர்தூக்கி ஒவ்வொரு இடங்களாகச் செப்பஞ்செய்பவர்கள் நூல்கள் சொல்லிய முறைமை அறிந்து செய்யவேண்டும். அவ்வாறு செய்தோர்கள் அடையும் பலன் நூறுமடங்கு அதிகமாகும். 82

சிவயோகியின் பெருமை

முந்நூற் சடங்கு முடியாதோன்
முடித்தோன் வேத முழுதுணர்ந்தோன்
தன்னேர் வள்ளி கோத்திரியெச்
சாவான் சத்திர யாகி
இந்நூற் புகழ்வே தாந்தியிவர்
இசைத்த முறையா யிரமதிகர்
தொன்னூல் வேதச் சிரப்பொருண்முத்
துரிய மகவாக் கியமதனின்.

பொ - ரை : பழமையான நூல்களில் சொல்லிய முறையில் சடங்குகளை முடிக்காதவன், சடங்குகளை முடித்தவன், வேதங்கள் முழுதும் அறிந்தவன் எவனே அவன் தனக்குத்தானே நிகராவான். வேதப்பொருளை உணர்ந்து கூறினோர் அவனினும் மேலானவர். இந்த அனைவரினும் சிவயோகி மேலானவராவர். 83

மதித்த தத்துவ மசியந்நு
வயவாக் கியத்தின் வாய்மையினை
விதித்த விஞ்சை யார்கோடி
மறையோர் மேலாம் பசுபதிமுன்

கதித்த வேதைச் சிவாகமத்தின்
கருதும் பொருள்மூன் றுணர்ந்துயிருட்
பதித்த பரம சிவனருளும்
பார்க்கும் சிவயோ கிக்கிணையே.

பொ - ரை : தத்துவமசி வாக்கியத்தை உணர்ந்து அந்த வாக்கியத்தில் கூறிய முறையில் உண்மையாக நடப்பவர் தேவர்களிலும் மிக மேலானவராய், பசுபதியாகிய இறைவர் திருமுன் அடைந்து, சிவாகமங்களுள் கூறப்பட்ட முப்பொருளுண்மையையுணர்ந்து இறைவனருள்பெற்று வாழும் சிவயோகிக்கு இணை ஒருவரும் இல்லை என்பதாம். 84

ஆசாரியருக்கு அன்னம் அளிப்போர் அடையும் பலன்

வேத நன்குணர் விப்பிரர் கோடிபேர்க்(கு)
ஆதி நான்முறை யாலருத் தும்பலம்
ஓது மோர்குர வற்குறும் ஓதனம்
காத லாலருத் தும்பலம் காட்டுமால்.

பொ - ரை : வேதங்களை நன்குக உணர்ந்த பிராமணர் ஒரு கோடி பேருக்கு, முதன்மையாகிய நூல்கள் சொல்லிய வகையில் உணவு அளிக்கும் பலன், ஞான நூல்களை அருளிச்செய்யும் ஞானசிரியருக்கு வேண்டும் உணவை அவர்பால் ஒருமுறை ஊட்டுவதாலே அடையலாம். 85

சிவயோகிக்கு அன்னம் அளிப்போர் அடையும் பலன்

மறைவ லோரிலக் கம்பெயர் மாந்தவே
நிறையி னலருத் தும்பலம் நேருமால்
உறையும் சாதக யோகி ஒருவனுக்(கு)
அறையு நான்முறை அன்னம் அருத்தவே.

பொ - ரை : வேதம்வல்ல பிராமணர் ஒரு இலட்சம் பேருக்கு அவர்கள் உண்ணுமாறு நிறைந்த அன்பால் உணவு அளிக்கும் பலன், சாதகியாகிய சிவயோகி ஒருவருக்கு நூல்கள் சொல்லும்முறையில் அன்னம் அளிப்பதால் உறுதியாக அடையலாம். ஆகவே, சிவயோகி எல்லாரினும் மேலானவராவார் என்பதாம். 86

சற்புத்திரமார்க்கத்தார்க்கு அன்னம்
அளிப்போர் அடையும் பலன்

ஓது நான்மறை யோரயு தம்பெயர்க்(கு)
ஈத லால்வரும் புண்ணியம் எய்துமால்
பூத நாதன் பதம்பணி புத்திரர்
ஏத மில்லொரு வர்க்கமு தீதலே.

பொ - ரை : பூதப்படைகளுக்குத் தலைவனாகிய இறைவன் திருவடிகளைப் பணியும் சற்புத்திர மார்க்கத்தினர் ஒருவருக்கு அமுது அளித்தல், நான்கு வேதங்களையும் முற்றக்கற்ற பதினாயிரம் அந்தணர்களுக்கு அன்னம் அளித்தலால் அடையும் புண்ணியப்பயனை அடைவிக்கும். 87

சமயதீட்சைபெற்றவர்க்கு அன்னம்
அளிப்போர் அடையும் பலன்

ஆற்றும் வேதியர் ஆயிரம் பேர்தமக்(கு)
ஏற்ற மோடனம் ஈபலம் யாவையும்
சாற்று மோர்சம யிக்குத் தகுதியால்
போற்றி வீசிடும் புண்ணியம் நல்குமால்.

பொ - ரை : பிராமணர் ஆயிரவர்க்கு உயர்வாகிய நிலையில் அன்னமளிப்போர் அடையும் பலன் யாவையும், சொல்லப்படுகின்ற ஒப்பற்ற சமயதீட்சை பெற்ற

ஒருவருக்கு அவர் தகுதியறிந்து பணிந்து அன்னங் கொடுப்பதால் அடையலாம். 88

சிவநாமகீர்த்தனம் செய்வோர்க்கு அன்னம் அளிப்போர் அடையும் பலன்

நூறு வேதியர்க் கீபலம் நொய்தென
வீறி யோங்கி விளங்குதல் மெய்ம்மையே
ஏறு யர்த்தருள் எம்பெரு மான்புகழ்
கூறும் பத்தருக் கன்னம் கொடுத்தலே.

பொ - ரை : இடபவாகனத்தையுடைய இறைவர் அருள்பெற்று அவர்புகழை நாவாற்கூறும் அன்பர்களுக்கு அன்னங்கொடுத்தல் நூறு பிராமணர்களுக்கு அன்னங்கொடுக்கும் பலனைக்காட்டிலும் மிகமேலானது என்று நூல்கள் கூறுகின்றன.

இறைவன் புகழைப் பாடுவோர்க்குக் கொடுப்பதே வீறுபெற்றோங்கும். இது உண்மை என்பதாம். 89

சாமரம், தண்டுலம், தீபம், ஆடை, கனி இவை சிவபெருமானுக்கும் ஆசாரியர்க்கும் கொடுக்கும் பலன்

போற்று சாமரம் தண்டுலம் பூவொளிக்
காற்று தீபம் கலைகனி யாதிய
ஏத்தி யீசற்கு மின்குர வற்குமே
சாற்றி யீந்தவர் தாமுறு புண்ணியம்.

பொ - ரை : ஆகமங்களில் போற்றப்படுகின்ற சாமரம், தண்டுலம், மிக அழகிய தீபம், சிறந்த கனி ஆகியவைகளை இறைவர்க்கும் ஆசாரியர்க்கும் பணிவுடன் கொடுத்தவர் அடையும் புண்ணியம்.

கருத்து அடுத்த பாடலுள் தொடருகின்றது. 90

ஓது ரோமநற் றண்டுல மோர்மலர்
ஆதி யாகிய அவ்வவற் றின்றெகைக்(கு)
ஏத மில்லுக மாயிர மின்பொடும்
பூத நாதன் புரத்தில் பொலிவரால்.

பொ - ரை : சொல்லப்படுகின்ற தண்டுலம், ஒரு மலர் ஆதியாகிய அவ்வவற்றில் கொடுக்கப்படும் அள வுக்கேற்பக் குற்றமில்லாது ஆயிரம்யுகம் இன்பமுடன் பூதநாதனாகிய இறைவனது சிவபுரத்தை அடைந்து சிறப்புடன் விளங்கிக்கொண்டிருப்பர். 91

உத்தியானவனம் வைப்போர் அடையும் பலன்

உத்தி யானம் இறைக்களித் தோரதிற்
பத்தி ரம்மலர் பைங்கனி யின்வரை
ஒத்த சீருகம் ஒன்றி மகிழ்வொடு
நித்த னேங்கும் புரத்தில் நிலவுவார்.

பொ - ரை : உத்தியானவனம் இறைவருக்கென்று வைத்துக்கொடுத்து அவ்வனத்திலிருந்து பத்திரம், மலர், கனி ஆகிய இவைகளை இறைவருக்களித்தோர் ஒரு யுகம் மகிழ்வோடு ஒன்றியிருந்து இறைவரது சிவ புரத்தில் விளங்கிக்கொண்டிருப்பார். 92

சடைமுடி பரிக்கும் சிவபத்தர் அடையும் பலன்

பத்தர் நான்முறை வேணி பரித்திடில்
ஒத்த வற்றுறு வேணிஒவ் வொன்றிற்கு
மெத்து மச்சுவ மேத பலத்தினைச்
சத்தி யம்மவர் நாடொறும் சார்தலே.

பொ - ரை : அடியவர் சிறப்பை நூல்களில் சொல் லியபடி நன்றாக அறிந்து அவர்களின் சடைமுடியைத்

தீண்டினேர்க்குத் தீண்டிய ஒவ்வொரு சடைக்கும் ஒவ்வொரு அசுவமேத வேள்விசெய்த பலன் சத்தியமாகக் கிட்டும் என்பதாம். 93

முண்டிதம், சிகையுடைய சிவபத்தர் அடையும் பலன்

அண்ட வாணனுக் கன்பொடு முண்டிதம்
கொண்ட நீள்சிகை யாயினும் கொண்டுளோர்
பண்ட ருந்நர மேத பலத்தினேர்
எண்டி கழ்ந்த தினந்தொறும் எய்துவார்.

பொ - ரை : தேவர்கள் தலைவனுகிய இறைவன் பால் அன்புகொண்டு மொட்டையுடையவராயினும், நீண்ட சிகையுடையவராயினும் அவர்கள் நூல்களில் கூறியுள்ளபடி நற்பலன்கள் பெற்று எல்லா உலகங்களிலும் உள்ள இன்பங்களை நாள்தோறும் அடைந்து இன்புற்று வாழ்வர். 94

சிவபத்தருக்குச் சிவலிங்கம் கொடுப்போர் அடையும் பலன்

ஈச னன்பர்க் கிலிங்க மளிக்கிலத்
தேசு வேதித் திலத்தொகைக் காயிரம்
பேசு திவ்விய கற்பம் பிரானுறை
வாச மார்சிவ லோகம் மருவுவார்.

பொ - ரை : சிவபெருமானுக்கு அடிமைப்பட்ட அடியவர்கட்குச் சிவலிங்கம் கொடுத்தால் அவ்வாறு கொடுத்ததன் பலன் ஒன்றுக்கு ஆயிரமாக ஓங்கப் பெற்று நம்பெருமானுறைகின்ற திருக்கயிலாயத்தை அடைந்து இன்புற்று வாழ்வார்கள். 95

சிவாலயத்திலும் ஆசாரியர் இருக்குமிடத்திலும் ஒருநாள் திருவலகிடுவோர் அடையும் பலன்

அன்னைல் தன்பொருட் டாசிரி யன்பொருட்(டு)
எண்ணி யேஅல கிட்டுழி ஓர்தினம்
கண்ணின் மேவரு செந்துக் கழியினும்
நண்ணு வார்சாந்தி ராயண நற்பலம்.

பொ - ரை : இறைவர் திருக்கோயிலிலும், ஆசாரியர் இருக்கும் திருமடத்திலும் ஒருநாள் எண்ணித் திருவலகிட்டால் அவர்கள் நிச்சயமாகச் சாந்திராயண விரத நற்பலனை அடைவார்கள். 96

ஒருபட்சம் திருவலகிடுவோர் அடையும் பலன்

மிக்க இந்த விதியிடை யின்றியே
பக்க மொன்றல கிட்டவர் பல்வளம்
தொக்க ருத்திர லோகம் தொகுவரால்
தக்க திவ்விய கோடி சதயுகம்.

பொ - ரை : மேலான இந்த முறையிலல்லாமல் ஒருபட்சம் இரு இடங்களிலும் திருவலகிடுவோர் பல வளங்களும்பெற்று, கோடிக்கணக்கானயுகம் உருத்திர லோகத்தையடைந்து இன்புற்று வாழ்வார்கள். 97

சிவபெருமானுக்காக நீராஞ்சனம் ஏந்துவோர் அடையும் பலன்

அன்ன லுக்கபி டேகம தாதியில்
எண்ணின் மிக்கநீ ராஞ்சனம் ஏந்தினோர்
விண்ண ருக்கரோர் கோடியர் மெய்யராய்ப்
பண்ணின் மிக்க பரன்பதி பற்றுவார்.

பொ - ரை : இறைவருக்கு அபிடேகம் முதலிய வைகட்கென்று மேம்பட்ட நீராஞ்சனம் ஏந்தியவர்கள் தேவர்கட்கும் மேலான சிறப்புடையராய் உண்மையில் சிறப்புமிக்க சிவனுறையும் உலகத்தை அடைவர். 98

தயிர் அபிஷேக பலன்

வண்டு கிண்டிக மூத்தொடை வார்சடை
அண்ட நாயகற் கன்பொடு வெண்தயிர்
தொண்டி னேடும் தொழுதுவந் தாட்டினேர்
விண்டு வின்பதி மேவுவர் மெய்ம்மையே.

பொ - ரை : வண்டுகள் மொய்க்கின்ற கொன்றை மலர்மாலைகளை அணிந்த நீண்ட சடையைப் பெற்று விளங்கும் இறைவருக்கு அன்பால் வெள்ளியதயிரைத் தொண்டுமுறையில் பணிந்து அபிடேகஞ்செய்தோர் விஷ்ணுவுறையும் வைகுண்டலோகத்தை அடைவார் என்பது உண்மையாகும். 99

பசுவின்நெய் அபிஷேக பலன்

ஆய கற்பமோ ராயிர கோடியும்
ஓய்வ தின்றி உஞற்றிய பாவங்கள்
தேயு நற்சிவ லிங்கத்திற் சீர்பெறத்
தூய நெய்முத லாட்டிடும் தூயர்க்கே.

பொ - ரை : ஆயிரகோடி கற்பகாலம் ஓய்வு ஒழி வின்றிச் செய்தபாவங்கள் முழுதும், சிவலிங்கத்திற்குத் தூய பசுவின் நெய்யை அபிடேகஞ்செய்த பலனால் கிட்டும் என்பதாம். 100

தேன் அபிஷேகம், ஞானக்கினியில் பூசைசெய்யும் பலன்

தேனு வந்து சிவலிங்கத் தாட்டினோர்
ஊனு வந்துபல் பாவமொ ழிப்பரால்
ஞான வங்கியிற் பூசை நயந்திடின்
மான வங்கி பதத்தினில் வாழ்வரே.

பொ-ரை: இறைவனுக்குத் தேனை மகிழ்வுடன் அபிடேகஞ்செய்தோர், தங்கள் ஊனைப்பற்றிய பாவங்கள் ஒழியப்பெறுவர். ஞானக்கினியில் சிவபூசையை விரும்பிச்செய்தால் அவர்கள் அக்கினியுறையும் உலகத்தை யடைந்து இன்புற்று வாழ்வர். 101

கரும்புரச அபிஷேக பலன்

இக்கின் ஊறும் இரதம் இனிமையால்
செக்கர் மேனிச் சிவலிங்கத் தாட்டினோர்
தக்கன் ஆற்று மகந்தடிந் தெம்மையாள்
மிக்க வீர தரன்பதி மேவுவார்.

பொ-ரை: கரும்பில் ஊறிய சாற்றைப்பிழிந்து செக்கர்மேனியனாகிய சிவபெருமானுக்கு அபிடேகஞ் செய்தோர், தக்கனுடையவேள்வியை அழித்து நம்மை யாண்ட மேம்பட்ட வீரபத்திரக்கடவுள் உலகத்தை அடைந்து விரும்பி வாழ்வர். 102

எண்ணெய், இளநீர் அபிஷேக பலன்

சங்க ரற்கெள் தயிலமெய்ச் சாத்திடில்
பொங்கு வாயுவின் பொன்னகர் சேர்குவார்
துங்க நீர்க்கனி யாட்டின் துரிசுபோய்த்
தங்கு வார்பிதிர் தங்கிய தானமே.

பொ - ரை : சங்கரருக்கு எள்ளெண்ணெய் திருமேனியில் சாத்தினோர். மிக உயர்ந்த வாயுவின் உலகத்தை அடைவர். பரிசுத்தமான இளநீர் ஆட்டினோர் குற்றங்கள் நீங்கப்பெற்று, தங்கள் பிதுரர்கள் தங்கியுள்ள பிதிருலகத்தில் சென்று தங்குவார். 103

விபூதி அபிஷேக பலன்

வேத நீற்றை விமலனுக் காட்டினோர்
ஓதும் அச்சிவன் போன்றங் கொழிவின்றி
மூதெ யிற்சிவ லோக முதற்பதி
போத முற்றவர் போற்றப் பொலிவரே.

பொ - ரை : வேதத்தில் சொல்லப்படுகின்ற திருநீற்றைப் பரிசுத்தராகிய இறைவருக்கு அபிடேகஞ் செய்தோர் அவன்புகழை இடைவிடாமல் ஓதி அதன் பயனாகப் பழமையான மதில்களையுடைய சிவலோகம் முதலியபதிகளை அடைந்து ஞானமடைந்து அங்குள்ளவர்கள் போற்றப் பொலிவுற்று வாழ்வார்கள். 104

சிவபெருமானுக்கும் ஆசாரியருக்கும் பொன்னும் மணியும் கொடுப்போரடையும் பலன்

நம்ப னுக்கும்நற் றேசிகற் கும்பசும்
செம்பொன் ஓர்துடி மாத்திரம் செய்தவர்
உம்பர் கோன்பதி ஒன்றுவர் மாமணி
இம்பர் ஈயின் அயன்பத மெய்துவார்.

பொ - ரை : இறைவருக்கும் ஆசாரியருக்கும் பசிய பொன்னும் மணியும் சிறிதளவுகொடுத்தோர் இறைவர் பதியை அடைந்து ஒன்றிவாழ்வர். மணி அளித்தோர் பிரமனுறையும் சத்தியலோகத்தை அடைவர். 105

சிவபெருமானுக்குத் தூபமிடுவோர் அடையும் பலன்

தேவ தாருவும் மேருவும் சீர்மிக
மேவு குந்துரு வும்வில்வ மாதிய
தாவில் நற்கனி நெய்யொடு தங்கிய
தூவம் இட்டவர் அச்சுதன் ஆவரே.

பொ - ரை: தேவதாரு, வில்வம்முதலியன அளித்துத் தூபங்கொடுத்தவரும், கனி நெய் முதலியன கொண்டு தூபமிட்டவரும், மேருமலையில் உறையும் பொருள்களைக்கொண்டு தூபமிட்டவரும் அச்சுதனுகி வாழ்வார். 106

விதியி வற்றினற் கந்தம் விரவிடின்
அதிக மாரு யிரங்குண மாமிவை
பதிய குக்குலு வோடு பொருந்திடில்
வதியு மாரு யிரங்குணம் வாய்க்கவே.

பொ : ரை ; முறையாக மேற்சொன்னவைகளுள் மணமுள்ள பொருள்களைக்கலந்து தூபமிடின் அதிக பலனுண்டாகும். குங்குலியம் முதலியன இடுவோர் அதனினும் அதிககுணம் பெறுவார். 107

அன்வ வைகிரு தத்துறின் ஆயிரம்
துன்னு மிக்குணத் தின்மயி டாக்கியென்
றுன்னு நற்பொருள் கூடின் உருத்திரன்
தன்னை யொத்த பலன்தரும் தன்மையார்.

பொ - ரை: இவைகள் பரிசுத்தநிலையில் இறைவருக்குச் செய்யப்பட்டால் எல்லா நலங்களும் பெற்று உருத்திரதன்மையடைந்து அவ்வுலகபலனைப் பெற்று வாழும் தன்மையராவார். 108

காரின் மிக்க பொதியத்திற் காரகில்,
சீரின் மிக்கஇத் தூபம் செறித்திடில்
பாரின் மிக்குப் பயின்றபல் பாவமும்
வேரி னற்று விளிந்திடல் மெய்ம்மையே.

பொ - ரை : மேகங்கள்படிகின்ற பொதியமலையில் உள்ள அகில் முதலியனகொண்டு தூபமிட்டோர் உலகத்தில் மிக்குச்செய்த பாவங்கள் அனைத்தும் வேரோடு அழிந்து கெட்டொழிதல் உண்மையாம்.

தூபமிட்டோர் முடிவில் பாவங்கள் அனைத்தும் வேரோடறுந்து சிறப்படைவர் என்கிறார். 109

சிவலிங்கப்பெருமானுக்குப் பச்சைக்கருப்பூரக் கலவை சாத்துவோர் அடையும் பலன்

சுகந்த கந்தம் சுலவிய லேபனம்
உகந்த லிங்கத் தொருதினம் சாத்தினோர்
இகந்து பாவம் இமையவர் கோடியாண்(டு)
அகந் தெளிந்தங் கரன்பதி நண்ணுவார்.

பொ - ரை : நல்ல மணமுள்ள பச்சைக்கருப்பூரக் கலவையை மனமகிழ்வுடன் சிவலிங்கத்துக்கு ஒருநாள் அன்புடன் சாத்தினோர் பாவங்கள் நீங்கப்பெற்றுத் தேவர்கள் நாடு அடைந்து ஒரு கோடி ஆண்டு மனத் தெளிவடைந்து அரனுறையும் நாட்டையடைவர். 110

சிவபெருமானுக்காகப் பேரிமுதலிய வாத்தியங்கள் கொடுப்போர் அடையும் பலன்

பொங்கு பேரி பொருமுர சம்மிரு
தங்க மோடு திமில்பட காதியும்
சங்கு தாளம் தனுமிகு காகளம்
விங்கு சீரொலி வேணுவும் வீணையும்.

பொ -'ரை : பேரி, முரசம், மிருதங்கம், திமில், படகு, சங்கு, தாளம், தனு, காகளம் மிக்க ஒலியை யுடைய வேணு வீணை முதலிய வாத்தியங்களும். 111

சொன்ன இன்னவை சோதி நிலாவணி
மன்ன வற்கு வழங்கிய மாதவர்
அன்ன வன்றனை யொத்த யுதந்தரும்
துன்னு கற்பம் அவன்பதி தோய்வரால்.

பொ - ரை : மேற்சொன்ன இந்த வாத்தியங்களை ஒளிமிக்க சந்திரனைத் தலையில் அணிந்துள்ள இறைவனுக்குக் கொடுத்த தவத்தினர், அவ்விறைவனை ஒத்து, கற்பகாலம் அவனுறையும் தலத்தில் இன்புறுவர். 112

சிவாலயத்திலும் மடாலயத்திலும் நவமணி
மாலிகையாற் பத்திசெய்தவர் அடையும் பலன்

நித்தி லம்முதல் நீள்மணி மாலிகை
அத்தன் ஆலயத் தன்பர் மடத்தினும்
பத்தி செய்தவர் பற்பல லோகமும்
அத்தர் போல்நெடுங் காலம் அமர்வரால்.

பொ - ரை : முத்துக்கள் முதலாய சிறந்த மணி மாலைகளை இறைவற்கும், திருமடத்திற்கும் பத்தியுடன் கொடுத்தவர், இறைவர்போல் விளங்குவர். 113

சிவபெருமான் சந்நிதியில் துதிசெய்வோரும்
கீதம் பாடுவோரும் அடையும் பலன்

துதியும் கீதமும் சோதிமுன் பத்தியால்
கெதியின் ஓதிடக் கேட்டவர் தாவரம்
மதியில் ஓடம் கிருமிவ ரன்பதி
வதியும் ஓதினர்க் கென்கொல் வகுப்பதே.

பொ - ரை : இசையோடுகூடிய பாடல்களைப் பத்தியுடன் ஓதினோர், ஓதக் கேட்டோர் தாவரம் முதல் எப்பொருளாயினும் அவர்களடையும் பலனை ஒருவராலும் சொல்லமுடியாது. 114

சிவபெருமானுக்கு வில்வக்குழம்பு அபிஷேகஞ்செய்யும் பலன்

மாசில் கூவிள பத்திர மத்தனம்
தேசு லாம்பிட லிங்கம திற்செயின்
ஓசை நான்மறை யோர்க்கயு தம்பசுப்
பேசி ஈந்த பெரும்பயன் பெற்றுளார்.

பொ - ரை : குற்றமற்ற வில்வக்குழம்புகொண்டு ஒளி விளங்கும் சிவலிங்கத்திற்கு ஆட்டினோர், நான்கு வேதங்களில் வல்ல பிராமணர்க்கு ஆயிரம் பசுவைத் தானமாகக் கொடுத்த பெரும்பயனை அடைவர். 115

சிவபெருமான் சந்நிதியில் யாவர் நடனம் செய்யினும் அடையும் பலன்

நிருத்தம் எந்தைமுன் யாவர்நி கழ்த்தினும்
விரித்த பானு வயுதம் விரிகதிர்
பொருத்து தேரிற் புலவர் அரம்பையர்
கருத்தின் நாடகம் காண்பர் சிவபுரி.

பொ - ரை : இறைவன் திருமுன்பு யாவர் ஒருவர் நடனமாடினாலும், அவர் ஒளிமிக்க தேரில் ஏறித் தேவர்கள் அறிஞர்கள் தேவமாதர்கள் இவர்கள் காணச் சிவலோகம் சென்று அங்கு அரம்பையர்கள் நிகழ்த்தும் நாடகத்தைக் கண்டு களிப்பர். 116

சிவாகமதானம் செய்வோர் அடையும் பலன்

நிறைந்த ஆகம தானம் நிகழ்த்திடில்
அறிந்து மற்றறி யாமையோ டாயினும்
சிறந்த பாலன் முதற்கொலை தீர்ந்துதேர்
உறைந்து நற்சிவ லோகம் புகுவரே.

பொ-ரை: நிறைவுள்ள ஆகமநூல்களைத் தானம் கொடுப்போர் தாங்கள் அறிந்தோ அறியாமலோ குழந்தைப்பருவம் முதல் செய்த கொலைப்பாவங்கள் தீர்ந்து இன்புடன் சிவலோகத்தில் புகுவர். 117

சிவனடியார்க்கு ஆசனம் கொடுப்போர் அடையும் பலன்

முண்ட கக்கண் முராரியும் போற்றிடும்
அண்டர் கோனன்பர்க் காசனம் ஈந்துளோர்
எண்டி கழ்ந்த இருபதி னுயிரம்
கொண்ட ஆண்டும் அரிபதம் கூடுவார்.

பொ-ரை: தாமரைமலர்போன்ற கண்களையுடைய திருமாலும் துதிக்கும் தேவர்கள் தலைவனாகிய சிவனது அடியார்கட்கு இருக்கை கொடுத்தோர், எண்ணிக்கை கொண்ட இருபதினுயிரம் ஆண்டளவு விஷ்ணுபதம் கூடி இன்பமடைவர். 118

சிவனடியாரைத் தரிசிப்போர் அடையும் பலன்

கங்கை வேணியன் தொண்டரைக் காணுறில்
கங்கை யாடும் பலன்தகும் கால்தொழு
தங்கை நீரின் அவர்தாள் விளக்கினேர்
அங்கி சேர்பதி தங்குவர் ஐந்துகம்.

பொ - ரை : கங்கையைச் சடையில் சூடிக்கொண்டுள்ள பரமசிவனின் அடியவர்களைக் கண்டால் கங்கையில் நீராடும் பலன் கிடைக்கும். அவர் திருவடியைத் தங்கள் கைகளால் நீர்கொண்டு விளக்கினோர் ஐந்து யுகம் அக்கினி உறையும் உலகத்தை அடைந்து தங்கி இன்புறுவர். 119

சிவனடியார்க்கு முகவாசம் கொடுப்போர் அடையும்பலன்

கான மார்முக வாசம் கனிவொடும்
ஊன மில்சிவ பத்தர்க் குதவினோர்
ஆன கோடி யுகமா யிரந்தழீஇ
ஞான வேற்கும ரன்பதி நண்ணுவார்.

பொ-ரை: இனிமைமிக்க முகவாசத்தை அன்போடு குறைவில்லாத சிவனடியார்கட்கு உதவியவர், ஆயிரம் கோடியுகம் ஞானவேலைக் கையில்கொண்டு விளங்கும் முருகன் உறையும் கந்தகோட்டத்தை நண்ணி அங்கு இன்புறுவர். 120

சிவனடியார்க்கு ஆசமனம் அருக்கியம்
கொடுப்போர் அடையும் பலன்

அன்ப ருக்கா சமன `மருக்கியம்
இன்ப ருக்காதி யல்வழி ஈந்துளோர்
துன்ப ருக்கிநி லத்தில் துலங்கியே
பின்ப ருக்கன் பெரும்பதி நண்ணுவார்.

பொ - ரை : சிவனடியார்கட்கு ஆசமனம் அருக்கியம் ஆகியவற்றை இன்பத்துடன் ஈந்தவர் தனது துன்பங்களைப் போக்கிக்கொண்டு இவ்வுலகில் சிறப்பு அடைந்து பின்பு, சூரிய உலகமாகிய பெரிய பதியை அடைவர். 121

•சிவபெருமானுக்குக் கருப்பூரதீபம் கொடுப்போர் அடையும் பலன்

பொற்பு றச்சிவ புண்ணியம் மேவிடக்
கர்ப்பு ரச்சுடர்த் தீபம் அளித்துளோர்
தற்ப ரச்சிவ சாமர தந்தரும்
சிற்ப ரச்சிவ ஞானம் தெளிகுவார்.

பொ-ரை: சிவபுண்ணியம் அழகுறப் பொருந்த இறைவர்க்குக் கருப்பூரச்சுடராகிய தீபம்கொடுத்தோர் மேலாந்தன்மையுடைய அறிவுடையராய் முடிவில் சிவ ஞானத்தையும் தெளிவாகப் பெறுவர். 122

சிவனடியார்க்கு விசிறிகொடுப்போர் அடையும் பலன்

ஒற்று வெண்மதி யோன்தொண்டர்க் கின்புறச்
சாற்றித் தால விருத்தம் தழீஇயதோர்
காற்றி னலவர் காயத்தின் வேர்வினை
மாற்று வார்வாயு வின்புரம் மன்னுவார்.

பொ-ரை: பிறைச்சந்திரனைச் சூடிக்கொண்டுள்ள பரமனின் அடியவர்கட்கு இன்பமுடன் விசிறி கொடுத்தோர், அவர்கள் விசிக்கொண்ட காற்றினல் கொடுப்போர் உடம்பின் மூலவினை மாறி வாயுவின் உலகத்தை அடைந்து நிலைத்துவாழ்வர். 123

சிவனடியாரை ஸ்நானம்செய்விப்போர் அடையும் பலன்

முந்தன் வேத முதல்வன் சிவனவன்
பத்தர் பாதம் பணிந்தவர்க் கன்பினல்
சுத்த நானம்செய் வித்திடுந் தூயவர்
புத்தி யாற்செய்த பாவங்கள் பொன்றுமே.

பொ-ரை: முத்தனும், வேதமுதல்வனும் ஆகிய பெருமானின் அடியவர்கள் திருவடிகளைப் பணிந்து அவர்களிடம் அன்புகொண்டு அவர்களைச் சுத்தநீரால் நீராட்டுபவர் தூய்மையானவராவர். மேலும், அவர்கள் புத்திபூர்வமாகச் செய்த பாவங்களும் இச்செயலால் அழிந்துவிடும். 124

சிவனடியார்க்குக் கோவணம் கொடுப்போர் அடையும் பலன்

நாற்ற மாமல ரோனெழில் நாரணன்
போற்று சங்கர னன்பர்க்குப் பொங்கிழை
ஆற்று கோவணம் ஈந்தவர் ஆயிரம்
தேற்று கோடி யுகஞ்சிவ லோகரே.

பொ-ரை: தாமரைமலரில் வீற்றிருக்கும் பிரமன், அழகிய நாராயணன் இவர்கள் துதிக்கும் இறைவனுடைய அடியார்க்கு நல்ல இழைகளாலாகிய கோவணம் கொடுத்தவர் ஆயிரகோடியுகம் சிவலோகத்தில் தங்கி இன்புறுவர். 125

சிவனடியார்க்குக் கம்பளம்கொடுப்போர் அடையும் பலன்

நீடு நற்சிவ பத்தர்க்கு நேசத்தால்
மூடு கம்பளம் ஈந்திடின் முன்னதின்
ஊடு ரோமமோ ரொன்றினுக் கோர்கழஞ்(சு)
ஆட கந்தரும் அப்பலம் நேருமால்.

பொ-ரை: சிறந்த சிவனடியார்கட்கு அன்புடன் மேல் மூடிக்கொள்ளும் கம்பள உடை கொடுத்தால் அக்கம்பளத்தின் ஊடேயுள்ள ரோமம் ஒவ்வொன்றிறுக்கும் ஒரு கழஞ்சுபொன் கொடுக்கும் புண்ணியம் அவர்களுக்குக் கிட்டும். 126

சிவனடியார்க்குப் புலித்தோல், மான்தோல் கொடுப்போர் அடையும் பலன்

வழுவை யின்உரி வானவ னன்பருக்(கு)
உழுவை யின்உரி யாதி உதவினோர்
தழுவு கம்பளத் திற்குமுன் சாற்றிய
விழுமி தாய பலத்தினை மேவுவார்.

பொ-ரை: தேவர்கள் தலைவராகிய சிவபெருமானது அடியவர்கட்குப் புலித்தோல், மான்தோல் முதலியன கொடுத்து உதவினோர், முன்பு கம்பளம் கொடுத்தோர் என்ன பலனை அடைவார்கள் என்று சொல்லப்பட்டதோ அதே சிறந்த பலனை அடைவர். 127

சிவனடியார்க்கு அன்னம் ஊட்டுவோர் அடையும் பலன்

கூற்றை வென்ற குழகன் அடியரைப்
போற்றி அன்னம் பொலிவுற ஊட்டினோர்
ஆற்று மோர்கற்பம் ஆயிர கோடிமேல்
வீற்றி ருப்பர் உருத்திரன் மெய்ப்பதி.

பொ-ரை: கூற்றை வென்ற திருவடியையுடைய இறைவனின் அடியார்களைத் துதித்து அவர்களுக்கு அன்னம் அன்புடன் ஊட்டினோர் கற்பகாலம் அல்லது ஆயிரம் கோடியுகம் உருத்திரலோகத்தில் விற்றிருந்து இன்புறுவர். 128

மூதை யிற்சிவ லோகன் முதற்பதி
ஓது காலம் அநேகம் உவப்புறீஇ
ஏத மில்சிவன் போன்றங் கிசைந்தபின்
நீதி மன்னவ ராகி நிலத்தராய்.

பொ - ரை : பழமையான மதில்களையுடைய சிவலோகம் முதலிய இடங்களில் அநேககாலம் மகிழ்வுடன் இருந்து குற்றமற்ற சிவன்போன்று விளங்கிப் பின்பு நீதிநிறைந்த அரசராய் நிலத்திடைப்பிறப்பர். 129

சிந்தி மூல திமிரம் இருவினை
பந்தம் விடென் பதுமூல பாசமும்
எந்தை பாதத் திணைந்துவ ரேகமாய்
அந்த மில்குர வன்திரு வாணையால்.

பொ - ரை : இந்நிலவுலகில் வந்தபின்னர் தங்கள் இருவினை, பாசபந்தம் இவைகள் நீங்கப்பெற்று, மூல மலமும் விட்ட நிலையில், அழிவில்லாத ஆசாரியனின் திருவாணையால் எந்தைதிருவடியில் ஏகமாகி இணங்கி வாழ்வார்கள்.

சிவனடியார்க்கு அன்னம் அன்புடன் ஊட்டினோர் அத்தனாகிவிடுவார் என்கின்றார். 130

சிவனடியார்க்குப் பிதிர்தினங்களில் அன்னம்கொடுப்போர் அடையும் பலன்

தென்பு லத்தவர் நாளில் திருவமு(து)
அன்பி னிற்சிவ பத்தர்க் கருத்திடில்
துன்ப கன்று பிதிர்க்கள் சுகந்தழீஇ
இன்பி னிற்சிவ லோகத் திருப்பரே.

பொ - ரை : பிதிர்க்கள்நாளில் திருவமுதினை மிக அன்போடு சிவனடியார்களுக்கு அளித்தவர், தங்கள் துன்பம் நீங்கப்பெற்று, பிதிர்க்கள் சுகமடைந்த நிலையில் இன்பமுடன் சிவலோகத்திலிருப்பார்கள். 131

சிவனடியார்க்கு வாசநீர் கொடுப்போர் அடையும் பலன்

ஓது பாடலம் உற்பல மாதிய
சீத மார்சுகந் தந்தரும் தீம்புனல்
மாத வர்க்கு வணங்கி வழங்கினோர்
ஏத மில்வரு ணன்பதம் எய்துவார்.

பொ-ரை: சிவனடியார்கட்குப் பாடலம் உற்பலம் ஆகியவை கலந்த மணத்தோடுகூடிய குளிர்ந்த இனிய நீரை வணக்கத்துடன் வழங்கியவர்கள் குற்றமில்லாத வருணனுலகத்தை அடைந்து வாழ்வர். 132

சிவனடியார்க்குக் கரகம்கொடுப்போர் அடையும் பலன்

பரக திக்குணை அன்பர் பரித்திடக்
கரக மாதி கரத்தில் வழங்கினோர்
திருவி னுக்கிறை போற்றிடத் திவ்விய
வருட கோடி வரத்தொடு மன்னுவார்.

பொ-ரை: முத்திமார்க்கத்தை அடைவான்வேண்டி அடியார்கட்கு அன்பளிப்பு முதலியன கொடுத்தோர், இலக்குமிநாயகனுகிய திருமால் போற்றப் பல கோடி காலம் நல்வரம்பெற்று நன்மையுடன் வாழ்வர். 133

சிவனடியார்க்குச் சுக்குமுதலிய கொடுப்போர்
அடையும் பலன்

சொற்ப யன்றரு சுக்குமுற் பத்திய
நற்ப யன்தரு பத்தர்க்கு நல்கினோர்
அற்ப கைக்கதிர் ஆதபன் போற்றவே
கற்ப மாயிரம் கோடியும் காண்பரே.

பொ - ரை : சிவனடியார்கட்கு நற்பயன் கொடுக்கும் சுக்கு முதலாய பத்தியப்பொருள் கொடுத்தோர் சூரியன் போற்றக் கற்பமாயிரகோடி அந்த உலகிடை வாழ்வர். 134

சிவனடியார்க்கெய்தும் வியாதிக்காக மருந்துகொடுப்போர் அடையும் பலன்

பெருந்த வர்க்குப் பிணிமருந் தாதியால்
வருந்தி மாற்றி மகிழ்ச்சிசெய் தோருகம்
நிரந்த கோடிநா றெய்தும் நிலையராய்த்
திருந்தி மேற்சிவ லோகம் திளைப்பரே.

பொ-ரை: பெரிய தவத்தினையுடைய அடியார்கட்கு வந்த பிணி அகல மருந்து முதலியன கொடுத்து, அப்பிணியைப் போக்கினோர் நிரந்தரமாகச் சிவலோகத்தை அடைந்து அங்குத் திளைத்து வாழ்வர். 135

சிவனடியார்க்கு விபூதிப்பெட்டகம் கொடுப்போர் அடையும் பலன்

நீதி வெண்டிறு நீறு நிறைத்துநற்
பூதி யாலயம் புண்ணியர்க் கீந்துளோர்
சீத தீர்த்தங்கள் செய்பலன் எய்தியே
போத மார்சிவ லோகம் புகுவரே.

பொ - ரை : நல்ல வெள்ளிய திருநீறு நிறைய விபூதிச் செம்படத்தைச் சிவனடியார்கட்குக் கொடுத்தோர், நல்ல சிவதீர்த்தங்கள் ஆடிய பலனை எய்தி இன்பமிகும் சிவலோகத்தை அடைந்து வாழ்வர். 136

சிவனடியார்க்கு ஆகமம் கொடுப்போர் அடையும் பலன்

ஒளியா ரோசைச் சிவாகமத்தை
உண்மைச் சிவஞா னிக்களித்தோர்
தெளிவா மியல்பில் தானவிதஞ்
சேர வழங்கும் திறத்தினராய்,
விளியா வரன்போல் நெடுங்காலம்
விருப்புற் றிருப்போர் படிப்போர்கட்(கு)
அளியா நிற்போர்க் ககமகிழ
அளிக்கும் பலமேல் அறைவாமே.

பொ - ரை : சிறந்த பொருள்களை விளக்கும் சிவாகமத்தை உண்மைச்சிவஞானிக்குக் கொடுத்தவர்கள், தெளிவாக எல்லாத் தானங்களையும் அளிக்கும் சிறப்பு உடையவராய் அழியாதவரமும் பெற்று நீண்டகாலம் விருப்புற்றிருப்பார்கள். படிக்கின்றவர்கள் அடையும் பலனை மேற்சொல்லுவாம். 137

படிப்போரும் ஆகமங்கொடுப்போரும் பதி பசு பாசத்தின் உண்மை அறிவோரும் அடையும் பலன்

அன்னோர் கோடி கோடிதரும்
அதிக மான புண்ணியத்தை
முன்னோ னியலின் மொழிந்தபடி
முற்று மடைதல் சத்தியமால்
இன்னோன் மையுறும் சிவஞான
இயலி னியன்முப் பொருடெரிந்தே
பின்னோ கையுடன் பெறும்பலன்தான்
பேசற் கரிய பெருமையதால்.

பொ-ரை: இவ்வாறு படிப்போர் ஆகமம் கொடுப்போர் ஆகியோரும், பதி பசு பாசம் என்ற முப்பொரு

ளுண்மை அறிவோரும் நூல்கள் கூறியபடி நன்மை அடைதல் சத்தியம். அவர்கள் பின் அடையும் பலனை என்னால் கூற இயலாது என்கின்றார். 138

சிவனடியார்க்கு உருத்திராட்சம் கொடுப்போர் அடையும் பலன்

செக்கர் மேனிச் சிவனடி யார்க்கணி
அக்க மாலிகை அன்புடன் நல்கினோர்
நக்க னார்பதம் நண்ணுவர் நண்ணியே
மிக்க ருத்திர லோகம் விரவுவார்.

பொ - ரை : செம்மேனியம்மானாகிய இறைவனின் அடியவர்கட்கென்று அணிந்துகொள்ள உருத்திராக்க மாலையை அன்புடன் கொடுத்தோர் இறைவனின் பதத்தை அடைந்து பின்னர் உருத்திர உலகத்தை அடைவர். 139

சிவனடியார்க்குக் குடைகொடுப்போர் அடையும் பலன்

துண்ட வெண்பிறை வேணியன் தொண்டர்க்குத்
தண்டி னோடுயர் சத்திரம் ஈந்தவர்
கொண்ட தங்குல மாதொடும் வேந்தராய்
மண்ட விற்சத யோசனை மன்னுவார்.

பொ - ரை : பிறைச்சந்திரனை அணிந்த சடை முடியுடைய இறைவனின் அடியவர்கட்குப் பிடியுடன் கூடிய குடை கொடுத்தவர்கள், தங்கள் குலமாதராகிய மனைவியாரோடு அரசராய் இவ்வுலகில் நீண்டகாலம் இன்பமுடன் வாழ்வர். 140

சிவனடியார்க்குப் பாதுகை கொடுப்போர் அடையும் பலன்

நீங்க லாது நிறைசிவ நேசர்பால்
பாங்கி னலணி பாதுகை ஈந்துளோர்
ஓங்கு தேர்முதல் வாகனம் ஊர்ந்நுபோய்
தீங்கி லாத சிவபுரம் சேர்வரால்.

பொ - ரை : என்றும் நீக்கமில்லாது இறையுடன் உறையும் அடியார்கட்கு அன்பினுல் அவர்களணிந்து கொள்ளப் பாதுகை கொடுத்தோர்கள், உயர்ந்த தேர் முதலியன ஊர்ந்து தீங்கில்லாத சிவபுரத்தை அடைவார்கள்.

குருவுபதேசம் பெறுதலின் இன்றியமையாமையைத் தெளிவிக்கிறது இப்பாடல். 141

சிவஞானதேசிகர் உபதேசக்கிரமமில்லாமல் சிவபுண்ணியம் செய்யின் பயனில்லை எனல்

புங்க மாஞ்சிவ புண்ணிய தேசிகர்
தங்கள் வாக்குப தேசம தன்றியே
இங்கி யற்றின் இரும்பயன் இல்லையாய்
மங்கு மென்னும் வரம்புக லாகமம்.

பொ - ரை : பரிசுத்தமான சிவபுண்ணியங்களை ஆசாரியரிடம் அருளுபதேசம்பெற்றுச் செய்யவேண்டும். அவ்வாறு உபதேசம் பெருமல் இவ்வுலகத்தில் செய்வதால் எந்தவிதப் பயனையும் அடையமுடியாது. அல்லாமலும் அவர்கள் செய்த புண்ணியமும் மங்கி மறைந்துவிடும் என்று ஆகமம் கூறுகின்றது. 142

உத்தம மத்திம அதமதேசிகர் ஆவார் இவர் எனல்

ஆகமத்தி லிருபத்தை யாயிர நற் சுலோகம்
அறிந்ததே சிகன்கனிட்ட ஐம்பதினு யிரந்தான்
மோகமற வாராய்ந்த தேசிகன்மத் திமனே
முறைமையினுல் ஓரிலக்க முயன்றவனுத் தமனே
ஏகனம லேசனருள் காமிகமுன் னுக
இயம்பியிடு மிருபத்தெட் டாகமத்தும் இஃதே
பாகமிரு சாராற்சா ரம்மெனவோ ரியலைப்
படித்துணர்ந்தோ ரியல்களெல்லாம் படித்துணர்
[பண் டிதனே.

பொ - ரை : சிவாகமங்களில் இருபத்தையாயிரம் சுலோகங்களை அறிந்த ஆசாரியன் கனிட்டனுவான்; ஐம்பதினுயிரம் சுலோகமறிந்தவன், அதனை ஆராய்ந்தவன் மத்திம ஆசாரியன்; முறையாக ஒரு இலட்சம் சுலோகங்களை முயன்று கற்றவன் உத்தம ஆசாரியன்; இவ்வாறு ஏகனும், தேவர்கள் தலைவனுமாகிய இறைவன் அருளிச்செய்த காமிகம் முதலாகச் சொல்லப்படுகின்ற இருபத்தெட்டு ஆகமங்களும் இதனையே சொல்கின்றன. அவ்வாறில்லாமல் ஆகமங்களில் கூறப்படும் ஒவ்வொரு இயலைப் படித்துப் பொருளுணர்ந்தவனும், அவ்வியல்கள் முழுவதையும் படித்து உணர்ந்தவனும் பண்டிதனுவான். 143

சிவத்தை யடியாரைச் சிந்திப்பார் தங்கள்
பவத்தை யறுக்கும் பனுவல் — நலத்தினைச்
சாற்றும்நல் லாகமத்தின் சார்புநூ லின்பொருளைத்
தேற்றினுன் சுப்ர மணியன்.

– உரையாசிரியன்

சிவபுண்ணியத்தெளிவு

பொழிப்புரையுடன் முற்றிற்று

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

[செய்யுள் எண்]

அட்டமூர்த்	34	இலயதத்	74
அண்டவா	94	இறைவனம	50
அண்ணல்	96	இன்னவை	31
அண்ணலு	98	ஈசற்கன்பா	48
அத்தன்	43	ஈசனன்பர்	95
அந்தமாதி	4	உத்தியான	92
அந்தரம்	10	உரைத்திடு	82
அழுக்கிலா	20	உலகினுக்	28
அறைறந்த	39	உலகினும்	1
அற்பமகத்	62	எதிபிரம	63
அன்பருக்	121	ஏற்றுக்கொடி	37
அன்னவை	108	ஒளியா	137
அன்றோர்	138	ஒற்கமில்	2
ஆகமத்தி	143	ஓசைகொள்	24
ஆதனம்	66	ஓதுநான்	87
ஆதிஇங்	79	ஓதுபாட	132
ஆதியில்	26	ஓதுமுப்	5
ஆயகற்ப	100	ஓதுரோம	91
ஆரணம்	23	கங்கை	119
ஆறுவேணி	65	கண்ணுதல்	19
ஆற்றும்	83	கந்தமாமல	58
இக்கினூறு	102	கலன்க	68
இங்கிவற்	27	களித்திடு	25
இரவியெழு	52	கற்றதே	80

காரின்	109	துண்டவெண்	140
கானமார்	120	துதியும்	114
கீற்றுவெண்	123	துய்யகாபில	56
குருத்தபத்	76	துன்றுசீர்	77
குருவிலிங்க	75	தென்புலத்	131
கூற்றை	128	தேவதாரு	106
கொம்மை	7	தேவதேவ	51
கொன்றை	55	தேற்றுநூன்	71
கோவின்	54	தேனுவங்	101
சகத்துயி	6	நம்பனுக்	105
சங்கரற்	103	நற்றமிழா	13
சித்தமல	42	நாற்ற	125
சித்திசேர்	17	நித்திலம்	113
சித்தும்	44	நிருத்தம்	116
சிந்திமூல	130	நிலத்தில்	49
சிரமேகாங்	38	நிறைந்த	117
சிவனைச்சிவ	21	நீக்கியார்	12
சுகந்த	110	நீங்கலா	141
சுருதியின்	22	நீடுநற்	126
செக்கர்	139	நீதிவெண்	136
செந்தழல்	61	நீரிஞேங்	70
சொற்பயன்	134	நூறுவேதி	89
சொற்றரு	15	பதியைப்	32
சொன்ன	112	பத்தர்	93
ஞானதேசிக	72	பந்தமான	35
தங்கம்கனக	47	பரகதி	133
தழங்கு	64	பரவும்	41
திருவரங்கு	67	பழகிய	காப்பு
திரைபொரு	9	பாசப்பகை	40

பாசமகற்று	33
,,	45
பாட்டமே	78
பிறையணிமொ	8
பிறையணிசிகர	29
புங்கமாம்	142
புன்சொலா	18
புன்னெறி	14
பெருந்தவ	135
பேதலூர்	11
பொங்குபேரி	111
பொற்புற	122
போற்று	90
மதித்த	84
மறைவலோ	86
மாசிலாகம	16
மாசில்கூவி	115
மாதவர்	81
மானத	60
மானம்	46
மிக்கவி	97
முண்டக	118
முத்தன்	124
முந்நூற்	83
மூதெயிற்	129
வடமேரு	36
வண்டு	99
வருந்தி	59
வழியினில்	30
வழுவை	127
வளங்கொ	69
வாவிகூப	73
விச்சை	53
விடமணி	3
விதியிவற்	107
விதியினு	57
வேதநான்கு	85
வேதநீற்றை	104